விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

**தவறவிடாதீர்கள்!!!**
A/L எடுத்த மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு,யுவதிகளுக்கு, கனடா செல்ல விரும்புபவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக்கு பொதிகள் அனுப்புபவர்களுக்கு ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.
STALL NO-279 JANUARY 26,27,28
JAFFNA TRADE FAIR 2018 0768226240

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 13 வெள்ளிக்கிழமை (26.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038

## தமிழர்களின் பூர்வீக பிரதேசமான

# முல்லைத்தீவு மாவட்டம் சிங்களமயமாகும் அபாயம்

## மத்திய அரசின் இரகசிய நடவடிக்கையை அம்பலப்படுத்திய வட மாகாணசபை

(யாழ்ப்பாணம்) முல்லைத்தீவு மாவட்டம் மிகக்குறுகிய காலத்துக்குள் சிங்களமயமாகும் அபாயம் நிலவுவதாக வட மாகாண சபையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரித்து முல்லைத்தீவில் சிங்களவர்களுக்கு மிகப்பெரிய நீர்ப் பாசனத்திட்டம் ஒன்றினை மத்திய அரசு கொண்டு வரும் இரகசிய நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளதனை வடக்கு மாகாணசபை அம்பலப்படுத்தியுள்ளது. (23-ம் பக்கம்...)

## கட்டார் மன்னர் இலங்கை விஜயம்



23

காணி உரிமையாளருக்கு

## கடற்படையினர் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)
கடற்படையினரின் காணி சுவீ கரிப்புக்கு எதிராக போராட் 23

## வீதி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் தொலைபேசி கம்பத்துடன் மோதுண்டு விபத்துக் குள்ளாகி தீப்பற்றி எரிந்ததில் படுகா யமடைந்த குடும்பஸ்தர் 23

கடற்படையினருக்கான காணி சுவீகரிப்பு

## பொது மக்களின் போராட்டத்தை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது



(யாழ்ப்பாணம்)
ஊர் காவற் றுறை பகுதியில் தனியார் ஒரு வருக்கு சொந்தமான காணியை கடற் 23

## ஜனாதிபதி - பிரதமர் இணைந்து ஊழலை ஒழிக்கும் திட்டம் ஆரம்பம்

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)
தேர்தலில் தனித்து களமிறங்க நேர்ந்துள்ள போதிலும் தேர்தலின் பின்னர் மீண்டும் தேசிய அரசாங் கமாகவே ஆட்சியினை முன்னெடு ப்போம். ஜனாதிபதி - பிரதமர் இணைந்து ஊழலை ஒழிக்கும் அடுத்தகட்ட வேலைத்திட்டங் களை ஆரம்பித்துள்ளனர் 23

மாகாணங்களின் நலன்களை கருத்திலெடுக்காது

## அரச அதிபர்கள் செயற்படுகின்றனர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)
மாகாணங்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது மத்திய அர சின் நலன்களை மாத்திரம் கருத் தில் கொண்டு மாவட்ட அரசாங்க அதிபர்கள் செயற்படுவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.
வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற் 23

## இனந்தெரியாதோர் குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மூன்று பேர் கொண்ட இனந் தெரியாத குழு தாக்கியதில் குடும் பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வேலணை ஆதார வைத்தியசாலையில் சிகி 23

ஊழல், மோசடி தொடர்பாக விவாதம் செய்ய

## சகல கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)
ஊழல் மோசடிகள் தொடர்பாக தன்னுடன் விவாதத்தில் ஈடுபட முன்வருமாறு ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன, சகல கட்சித் தலை வர்களுக்கும் அழைப்பு விடுத்துள் ளார். நேற்று பிற்பகல் பாணந்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே ஜனாதிபதி இத னைத் தெரிவித்தார். 23



# நம்பிக்கையின் பலம்

என்றும் கம்பீரம் மாறாத யாழ் மண்ணின் பலத்தை அதிகரிக்கும் நோக்கில், வருடாந்த நிகழ்வான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில், பல்தேசிய கூட்டாண்மை நிறுவனங்கள் அனைத்தும் இவ்வாண்டும் கூட்டிணைகின்றன. முன்னர் 'ஹொல்சிம் லங்கா' என்று விளங்கிய வர்த்தக நாமம் தற்போது INSEE ஆக பெயர் மாற்றம் பெற்றுள்ளதுடன், முன்னரை விட மிகச் சிறப்பாக தமது வாக்குறுதியை நிறைவேற்றிட இலங்கையில் தடம் பதித்துள்ளது. இக்கண்காட்சியில் கட்டிட நிர்மாணிப்பின் உத்தியோகபூர்வ தீர்வு வழங்குனராக பெரும்பங்கினை ஏற்பதையிட்டு INSEE பெருமிதமடைகின்றது.

**9வது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2018 ஜனவரி 26ஆம், 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாநகரசபை மைதானத்தில் நடைபெறும்.**

துரித இலக்கம்: 011 7 800 800

: facebook.com/SansthaCement
JITF 2018
INSEE CEMENT
(C-171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
(சு-1376)
#303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## இன்சுவை யாழ் ஒடியற் கூழ்
தினமும் காலை 11 மணி முதல்
யாழ்பாடி
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-1347)

## வேலையாள் தேவை

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் இயங்கும் சிற்றுண்டியகத்திற்கு (நெஸ்ட் கோப்பி) ஆண் வேலையாட்கள் தேவை. வயது 18-50 வரையானோர் உடன் தொடர்பு கொள்ளவும். (2563)

**தொடர்பு:-0773117875**

## உடனடி வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கிவரும் இறக்குமதி மற்றும் மொத்த விற்பனையில் முன்னணியில் திகழும் எமது EVEREST LANKA நிறுவனமானது புதிய கிளைகளை முல்லைத்தீவு, பரந்தன், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கீழ் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. (2564)

அலுவலகர், மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர், விற்பனைப் பிரதிநிதிகள், களஞ்சியக்காப்பாளர். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்பு:0779856671, 0771717278**

## விற்பனையாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள புடைவை விற்பனையாளர்கள் தேவை. ஆண்கள் (பழக ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

**சென்னை பெசன் வேல்ட்**
இல.63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் (2565)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான **பொது உளச்சார்பு பொது அறிவு** உட்பட பரீட்சைகளுக்கான ஏனைய விடயங்களும் யாழ்.நகரில் நடைபெறுகின்றன. (சு-1383)

தொடர்புகளுக்கு:- 0766883394

# மரண அறிவித்தல்கள்

## தெய்வர் சின்னத்துரை
### (ஏழாலை வாத்தியார்)



ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் மந்துவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தெய்வர் சின்னத்துரை நேற்று (25.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வர்-சின்னம்மா தம்பதியினரின அன்பு மகனும், சிவநாயகம் அவர்களின் பாசமிகு கணவரும், அமரர் நல்லம்மா, அமரர் பூலோகபூரணம், செல்வராசா (ஆசிரியர்), பாக்கியம் (கனடா), தங்கராசா (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரணவன் (பிரான்ஸ்), தேவிகா (கனடா), செல்வலட்சுமி (ஆசிரியர்-யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), அகிலன், தெய்வசீலன், தெய்வநிதி, இசைஞானி, மயூரன், ஞானசொரூபி, குகதாஸ், தயாளினி, தயாபரன் ஆகியோரின் பெரியதந்தையும், பாலசங்கர், குமுதினி, பாலஸ்கந்தன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, சிவபாதம், குலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், சிவானுஜா, தனுஸ்ரன், நித்திலன், ஆதவன், பவனுஷன், யானுகா, பிரவீனா, பிரவீன், நவீன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**
(2562)
**தகவல்:-**
**தங்கராசா**

## அமரர் திருப்பதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்



தேவரன் நாவலடி புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருப்பதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் அவர்கள் 25-01-2018 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கம்-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், கோமதி (சமுர்த்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் பருத்தித்துறை) யின் அன்புத்தாயும், சிவேந்திரகுமாரின் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) மாமியாரும் நிருஷனன், வருண் ஆகியோரின் பேர்த்தியும் சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற சண்முகராஜலிங்கம் மற்றும் திருத்தேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.01.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருக்கம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**புலோலி தேவரன்** (சி-1379) **குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:-1934/09/01
இறப்பு:-2018/01/25

## அமரர் திருப்பதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி சி.கோமதி அவர்களின் பாசமிகு தாயார் அமரர் திருப்பதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**அன்னாரின் துயரில் பங்குபெறும்**
**பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்-ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் பருத்தித்துறை.**
(சு-1380)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு 2கோடி ரூபாய் விவகாரம்

# சிவசக்தி ஆனந்தனின் குற்றச்சாட்டை விசாரிக்காவிடின் வழக்குத் தொடர்வோம்

## ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமரின் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு தலா 2 கோடி ரூபாய் இலஞ்சம் வழங்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை நடத்த வேண்டும். இல்லை என்றால் நாம் வழக்கு தாக்கல் செய்வோம் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



மகிந்த ராஜபக்ஷ ஆதரவு, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில்,

"வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கியதற்காக கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 2 கோடி ரூபாய் இலஞ்சம் வழங்கப்பட்டிருப்பதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, இலஞ்ச ஊழல்களை விசாரிக்கும் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும். அல்லது இது குறித்து ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால், கூட்டு எதிரணி வழக்குத் தாக்கல் செய்யும்." என்றும் அவர் எச்சரித்துள்ளார். (இ-7)

## தமிழ் முற்போக்கு கூட்டணி அரசிலிருந்து வெளியேறும்

(கொழும்பு)

"பதுளையில் பெண் அதிபரை மண்டியிட வைத்த ஊவா மாகாண முதலமைச்சரை அப்பதவியிலிருந்து தூக்கிவிட்டு, அநீதி இழைக்கப்பட்ட அதிபருக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பிக்களுடன் அரசிலிருந்து வெளியேறி, மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராடுவேன்" என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பழனி திகாம்பரத்தின் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-7)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு; சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251



அன்புடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு...

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், உங்களின் நியாயமான தீர்ப்புக்காக உங்களுடன் மனந்திறந்து சில கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள முற்படுகின்றேன்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகப் பிரதேசத்தில் இயல்புச் சூழல் முடக்கப்பட்டுக் கிடந்ததையும், அரசியல் தலைமைகள் செயற்பட முடியாமல் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கும், தென் இலங்கைக்கும் ஓடியதையும், அரச இயந்திரம் இயங்க முடியாமல் போனதையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான ஓர் இருண்ட சூழலிலேயே துணிச்சலோடு தேசிய நீரோட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.

அந்தச் சூனியச் சூழலையும், தடைகளையும் எதிர்கொண்டு, எமது தாயகத்தில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கும், எமது மக்கள் இயல்புச் சூழலை அனுபவிப்பதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தபடி நானே முன்னின்று உழைத்திருந்தேன்.

மக்கள் சேவையை திறம்படச் செய்து முடிப்பதற்காக இரவு பகல் பாராமலும், நேர, காலம் பாராமலும், மழை, வெய்யில் பாராமலும் நான் செயல்பட்டபோது, எனக்கு உங்களின் ஆலோசனைகள் தேவையாக இருந்தன. உங்களின் பங்களிப்பும் தேவையாக இருந்தது. அதற்காக, எந்தவேளையில் நான் உங்களை அழைத்தாலும் நீங்கள் வருகை தந்து மனம் சோராமல் உதவி செய்தீர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியைச் செய்தாலும், அதை ஒரு சமூக சேவையாகவும், மனிதாபிமானப் பணியாகவும் நினைத்து மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுத்ததையும், நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அத்துடன் நீங்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட உங்களுக்கு நான் பக்கபலமாக இருந்ததையும் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.
உங்கள் பங்களிப்பும், உதவியும் கிடைக்கப்பெற்றதால்தான், யுத்த இடிபாடுகளாகக் கிடந்த யாழ். குடா நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்தது.

எனது அயராத முயற்சியினால்தான் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது. அந்த நன்றி உணர்வோடு இன்னும் பலர் இருப்பதையும் அன்போடு ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்.எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேரகாலம் பாராமல் நான் அரச அதிகாரிகளை அழைத்திருந்தேன் என்பதற்காகவும், மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நியாயமான உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டுக்கொண்டதற்காகவும் உங்களில் சிலர் அதிருப்தியடைந்திருப்பதாலேயே தபால் மூல வாக்குகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு கணிசமான வாக்குகள் கிடைப்பதில்லை என்று கூறப்படுவதை நான் உண்மையென்று நம்பவில்லை.

எமது மக்களுக்காகவே நான் பாடுபட்டேன். எமது மண்ணுக்காகவே உழைத்தேன். கடந்த மூன்று வருடங்களாக எனக்கு எதிரான சக தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சதி காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்களும், அபிவிருத்தியற்று முடங்கிப்போனது எமது தாயகப் பிரதேசமும்தான். இப்பாதிப்பையும், பின்னடைவையும் எமது மக்கள் உணர்ந்து வருவதையும், அதை வெளிப்படுத்தி வருவதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.
இந்த முடக்கத்திலிருந்து அபிவிருத்தியும், மீள் எழுச்சியும் முழு வீச்சில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலம் மீதான நம்பிக்கையை எமது மக்களிடையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். சமூகச் சீர்கேடுகளை நிறுத்தி, அதனால் பாதிப்புக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதற்காக நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறான தீர்மானம் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. இம்முறை நியாயத்திற்காக எனது கோரிக்கையை ஏற்று நியாயத் தீர்ப்பை எழுதுவீர்கள் என்று நம்புகின்றேன்.

முயல்வோம்! வெல்வோம்! உளம்சோரோம்!!



X



என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(2405)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ ரோட் திட்டம் நடைமுறைப்படுத்தாமையால்

# ஊர் பக்கம் போக இயலாமல் உள்ளது மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

இப்ப எங்களாலா ஊருக்குள்ள போகேலாம இருக்கு. சனம் எங்களுக்கு அடிக்க வருகுது என தமிழரசு கட்சியின் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றபோது, வடக்கில் ஐ ரோட் திட்டம் பின்னடிக்கப்பட்டமையினால் அந்த திட்டத்துக்குள் அடங்கும் வீதி களை உடனடியாக செப்பனிட மாகாண வீதி அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி பிரேரணை கொண்டு வந்திருந்தார்.

இநத பிரேரணை தொடரபில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது மாகாணத்துக்குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்களம், உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பல வீதிகள் ஐ ரோட திட்டங்களுக்கு விதந்து ரைக்கப்பட்டமையினால் வேறு திட்டங்களில் உள்ளடக்கப்படாத நிலையில் மிகவும் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றது. இந்த வீதிகள் நடப்பாண்டு பணிகள் இடம்பெறும் என்ற உத்தரவாதத்துக்கு இணங்க முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய திட்டங்களில் இந்த வீதிகள் உள்வாங்கப்பட்டன.

இந்தத் திட்டமானது எதிரவரும் 2020ஆம் ஆண்டிலேயே செய்யப்படும் எனவும் அது கூட அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் இருக்கின்றது என அறிகின்றேன். மிகவும் பழுதடைந்துள்ள வீதிகளினால் மக்கள் பயணிக்க முடியாமை காணப்படுகின்றது. பல இடங்களில் இருந்தும் மக்கள் வீதிகளை செப்பனிடுமாறு கோரிக்கைகளும் முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆகவே உடனடியாக கிடைக்கக்கூடிய வேறு நிதி மூலங்களில் இருந்து இவ் வீதிகளை செப்பனிட வேணடும் என வீதி அபிவிருத்தி மற்றும உள்ளூராட்சி அமைச்சரான வடக்கு மாகாண முதலமைச்சரை இந்த சபை கோருகின்றது என தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

பின்னர் நாங்கள் திருத்தி தாறம் எண்டு சொன்ன வீதிகள் இதுவரையும் திருத்தி கொடுக்கததால் நாங்கள் இப்ப ஊருக்குள்ள போகேலாம இருக்கு. சனம் அடிக்க வருகுதுகள், எப்படி இந்த வீதியால வந்தனிங்கள் எண்டு கேக்குதுகள் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ்மாநகர சபை மைதானத்தில் 9ஆவது முறையாக நடைபெறவுள்ள இந்த வர்த்தக சந்தையில் இந்தியாவின் வர்த்தக தொழிற்றுறையின் மன்றாங்களை ஒன்றிணைத்த அசோக்சாம் அமைபபிலுள்ள 75 நிறுவனங்கள் இம்முறை நேரடியாக கலந்து கொள்ளவுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் 300க்கு மேற்பட்ட விற்பனை நிலையங்கள் இதில் இடம் பெறவுள்ளதாக தெரிவித்தனர். மேலும் உள்ளூர் உறபத்தி தயாரிப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.

பாடசாலை சீருடையில் வரும் மாணவர்களுக்கு கண்காட்சி இலவசமாக பார்வையிட அனுமதிக்கப்படும் என்று கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

# இறுதிக்கு முன்னேறியது இலங்கை

## பங்களாதேஷை 82 ஓட்டங்களுக்கு சுருட்டியது

சுரங்க லக்மல், சமீரவின் துல்லியமான வேகப் பந்துவீச்சு கைகொடுக்க 10 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியை பதிவு செய்த இலங்கை தொடரின் இறுதிப் போட்டிக்கு ஜோராக முன்னேறியது.

துடுப்பாட்டத்தில் சொதப்பிய பங்களாதேஷ் 82 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இலங்கை, பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்குபற்றுகின்றன.

இத்தொடரின் கடைசி லீக் போட்டி நேற்று டாக்காவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களா தேஷ் அணிக்கு லக்மல் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' அனாமுல் ஹக் (0), தமிம் இக்பால் (5), மகமதுல்லா (7) ஆட்டமிழந்தனர். சகிப் அல் ஹசன் (8), 'ரன்-அவுட்' ஆனார். திசர பெரேரா பந்தில் சபிர் ரஹ்மான் (10), அபுல் ஹசன் (7) வெளியேறினர். முஷ்பிகுர் ரஹிம் (26) ஆறுதல் கொடுத்தார்.

24 ஓவர்கள் வரையே தாக்குப்பிடித்து ஆடிய பங்களாதேஷ் அணியால் 82 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் லக்மல் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

சுலப இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு குணதிலக, உபுல் தரங்க ஜோடி கைகொடுத்தது. இலங்கை அணி 11.5 ஓவர்களில் விக்கெட இழப்பின்றி 83 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்களால இலகுவான வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் குணதிலக (35), தரங்க (39) ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கையின் சுரங்க லக்மல் தெரிவானார்.



மஹாநல்லிணக்க விழா

26.01.2018

வட கதிர்காமம் பறாளாய் சுழிபுரம் கதிர்காமவேல் பிரதிஷ்டா வைபவம்

வாழ்த்துவோர்:

நல்லிணக்க அமைச்சு நுகேகொட வீதி நாவல, வட மாகாண ஆளுநர் கௌரவ ரெஜினோல்ட் கூரே அவர்கள், தொல்பொருள் சக்கரவர்த்தி எல்லாவெல மேதானந்த தேரர் அவர்கள், எகலியகொட தம்மபாலதேரர் விகாராதிபதி ஸ்ரீ சுமண பிரிவெனா வட்டினா பஹ சோமானந்த தேரர் (பிக்குகள் முன்னணிச் செயலர்), மீகஹயந்துரே சிறிவிமல தேரர் ஸ்ரீ நாகவிகாரை யாழ்ப்பாணம், நல்லை பரமாச்சாரிய சுவாமிகள் குரு மகா சந்நிதானம், சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய அர்ச்சகரும் பரிபாலன சபையின்ரும் சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் ஆலய முகாமையாளர்கள்.

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் சோமசுந்தரம்

**(வேலணை மேற்கு - 08, வேலணை)**

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் சோமசுந்தரம் நேற்று (25.01.2018) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - மகாலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கோமதியின் அன்புக் கணவரும் விஜிதா, விஜயரூபன், பத்மரூபன் (கிராம அலுவலர் - J/28, J/29 புங்குடுதீவு), சாந்தரூபன், திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம், தர்சிகா, துஷாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான காந்திமதி, இந்துமதி, விசாகரெட்ணம், வளர்மதி மற்றும் கருணாநிதி, செல்வநிதி (மலேசியா), பூமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிஷா, விதுர்சன், பபிஷன், டாரணிஜா, சபரீஸ், கஷ்மியா, ருவிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (2567)

வேலணை மேற்கு - 08
வேலணை.

தகவல்: குடும்பத்தினர்
077 983 3217, 077 524 7154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567 1532


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## 2018ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் **திரு.இ.த.ஜெயசீலன்,** ஆணையாளர் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இன் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபையிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2017 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/மதிப்பீட்டை 2018 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் 6 சதவீதமான (6%)வருடாந்த வீத வரி விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2018 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15%திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20%திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

**யாழ்ப்பாணம் மாநகர சபை** — **திரு.இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்.**

**மேற்படி அட்டவணை**

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2018 - 31.03.2018 | 31.01.2018 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2018- 30.06.2018 | 30.04.2018 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2018-30.09.2018 | 31.07.2018 |
| நான்காவது காலாண்டு | 01.10.2018- 31.12.2018 | 31.10.2018 |

**குறிப்பு:**-2018 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப் பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகரசபை ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விபரங்களைத் தெரிவித்து 2018 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிகளைச் செலுத்த முடியும் என்பதுடன் 31.01.2018 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
(வாரவிடுமுறைநாட்களான 2018 தை மாதம் 27,28ஆம் திகதிகளிலும், பொது விடுமுறை நாளான 31ஆம் திகதியும் அலுவலக செயற்பாடுகள் இடம்பெறும்).

**திரு.இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1378)

## இராசிபலன்

**மீனம்** ... திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்கள் ஏற்படலாம், முத்தான வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மேடம்** காலைப் பொழுதே கல கலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** ... வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், நல்ல தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

| | | | |
|---|---|---|---|
| | • | சந் | |
| | **இராசிபலன்** கிரகநிலை | | ராகு |
| சூரி. சுக் கேது. புத | சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் காலை 8.45 மணிக்கு இடப-சந் | | |
| சனி | செவ் | குரு | |

**26.01.2018**
தை 13, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
நவமி முற்பகல் 9.23 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 2.30 மணிவரை
சுபநேரம் 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை
கார்த்திகை விரதம்

குறிப்பு: சுவாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

வளவன்

**கடகம்** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.


**தனுசு** சுவாரஸ்மான சம்பவங்கள் இடம்பெறலாம், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**துலாம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு தேவை, சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், வம்பு வழக்குகள் தீர்த்து வளம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிவியல் மேதையும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல்கலாம் யாழ்.இந்துக்கல்லூரிக்கு வருகை தந்த தினத்தை நினைவு கூறும் முகமாக மரம் நடுகையும் நினைவுப்பேருரையும் கல்லூரி அதிபர் சதா.நிமலன் தலைமையில் பிரார்த்தனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் (வடமாகாணம்) வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபை மின்பாவனையாளர் சேவை நிலையத்தில் தலைவர் வ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். (இ)

## அதிபர் மண்டியிட்ட விவகாரம்

# பேரினவாதத்தின் அதி உச்சநிலை!

## அமைச்சர் அனந்தி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபரை, ஊவா மாகாண முதலமைச்சர் தன் முன்னிலையில் முழந்தாளிட்டு மன்னிப்புக் கேட்கவைத்துள்ளமை சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அதி உச்ச நிலையாகும் என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

தனது பரிந்துரைக் கடிதத்துடன் சென்ற பாடசாலை மாணவியை பாடசாலையில் சேர்க்க மறுத்த பதுளை மகளிர் மகா வித்தியாலைய பெண் அதிபர் பவானியை நேரில் அழைத்து ஊவா மாகாண முதலமைச்சர் தன் முன்னிலையில் முழந்தாளிட்டு மன்னிப்பு கேட்கவைத்துள்ளமை குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணத்தை ஆளும் முதலமைச்சர் என்ற நிலை கடந்து ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க இனவாதியாக செயற்பட்டுள்ளதன் வெளிப்பாடாகவே தமிழ் அதிபர் மீதான இக்கொடுமை அரங்கேறியுள்ளது. போகிற போக்கில் நடைபெறும் சம்பவமாக இல்லாது ஆழமான இனத்துவேசம் மற்றும் அதிகார அத்துமீறலின் உச்ச வெளிப்பாடாக நடந்தேறியுள்ள இச்சம்பவம் வன்மையான கண்டனத்திற்குரியதாகும்.

இனத்துவேசம் மற்றும் அதிகார அத்துமீறலின் வெளிப்பாடாக குற்றமிழைத்தது டன் நின்றுவிடாது உண்மையை வெளிப்படுத்த முடியாதளவிற்கு அச்சுறுத்தியும் உள்ளமை இலங்கை நாட்டில் தமிழர் நிலை எவ்வாறு உள்ளதென்பதற்கு சான்றாகும். உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட பின்னரான எதிர்ப்புகளையடுத்து முதலமைச்சர் வசமிருந்த கல்வியமைச்சு பறிக்கப்பட்டு ஆளுநரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு மட்டுமல்ல முதலமைச்சர் பதவியும் அவரிடம் இருந்து உடனடியாக பறித்தெடுக்கப்படுவதுடன் அரசியலின் எந்த நிலையிலும் எக் காலத்திலும் அவர் பொறுப்பு வகிக்காதவாறு கடுமையான நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும்.

மக்களை ஆளும்நிலையில் இவ்வாறான குரோத மனப்பாங்குள்ளவர்கள் இருப்பது பேராபத்தாகும். திட்டமிட்டு நடந்தேறிய நிகழ்வாக இல்லாத போதிலும்தனது பரிந்துரையை ஏற்க மறுத்தவர் ஒரு தமிழர் என்பதே அவரை ஆத்திரத்தின் உச்ச நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதென்றால், நீறு பூத்த நெருப்பாககனன்றுகொண்டிருந்த தமிழர்கள் மீதான வெறுப்புணர்வே காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## கற்கைநெறி நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக்கல்வி அலகினால் நடத்தப்படவுள்ள வருமானம் ஈட்டக்கூடிய முறைசார கல்வி கற்கை நெறியில் கலந்து கொள்பவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

முறைசாராக் கல்வியில் மட்பாண்ட உற்பத்திகள், கடற்சிற்பி சங்கு உற்பத்திகள். ஆயுள்வேத உற்பத்திகள், தெங்கு உற்பத்திகள், இரத்தினக்கல் கழிவு சித்திரப்படைப்புக்கள் போன்ற கற்கை நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ள ஆர்வமுடையோர் அன்றைய தினமே வலயக்கல்வி அலுவலகத்தில் பெயரைப்பதிவு செய்து நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளமுடியுமென முறைசாராக்கல்விப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ-8)

## வடக்கு மாகாண சபைக்கு இருவர் புதிதாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர்களாக சபாரத்தினம் குகதாஸ் மற்றும் அப்துல் நியாஸ் மொகமெட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் இமானுவேல் ஆனோல்ட் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கடந்த டிசெம்பர் மாதம் பதவி விலகியிருந்தார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு அதன் செயலாளரிடம் தேர்தல்கள் ஆணைக்குழு புதிய உறுப்பினரின் பரிந்துரையைக் கோரியிருந்தது.

இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்ட சபாரத்தினம் குகதாஸின் பெயர் கட்சியின் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சபாரத்தினம் குகதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பதவி விலகியிருந்தார்.

அவரது இடத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் அப்துல் நியாஸ் மொகமெட்டின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதனடிப்படையில் மாகாண சபையின் உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-4)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமூகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடவடி முறைச் சட்டக்கோவையின் 431 (2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.

வழக்கு.இல:-MC/281/S/17-BR/1297/S/17, மறுதவணை:-27.03.2018, விபரம்:-67-0180 இலக்க உழவு இயந்திரப் பெட்டி -01, வழக்கு. இல:-15100, விபரம்:-இலக்கமற்ற சைக்கிள், வழக்கு. இல:- MC/2771/PC/17, லாவா வர்க்க கையடக்கத் தொலைபேசி-01, டிஜிற்றல் கமரா-01, ஈமெயில் வர்க்க கையடக்க தொலைபேசி-01, வழக்கு.இல:-32264, விபரம்:-இலக்கமற்ற துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:-B/790/14, விபரம்:- 69861 615 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு இல:-37 696, விபரம்:-இலக்கமற்ற துவிச்சக்கரவண்டி-01, வழக்கு இல:-MC/1479/PC/17, விபரம்:-696 872 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு இல:-MC/1479/PC/17, விபரம்:-69899466 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு இல:-MC/1479/PC/17, விபரம்:- 57156306 இலக்க துவிச்சக்கர வண்டி:-01, வழக்கு இல:-MC/1479/PC/17, விபரம்:-2215559 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:- MC/980/MT/17, விபரம்:-5609353 இலக்க துவிச்சக்கர வண்டி-01, மறுதவணை:-02.04. 2018,

வழக்கு.இல:-B/1017/13, விபரம்:-67178640 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:-39692, விபரம்:-69595579 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு. இல:-MC/2848/S/16, விபரம்:-SM664798 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:-MC/2107/MT/17, விபரம்:- UL 758328 இலக்க துவிச்சக்கர வண்டி-01, மறுதவணை:-03.04.2018,

வழக்கு. இல:- MC/1976/PC/16, விபரம்:- UL731821 இலக்க துவிச்சக்கர வண்டி-01,வழக்கு.இல:-MC/4106/MT/16, விபரம்:-59894296 இலக்க துவிச்சக்கர வண்டி-01,வழக்கு.இல:-MC/763/PC/17,விபரம்:-57124110 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:-MC/733/PC/17, விபரம்:-69774338 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:-MC/3826/MT/16,விபரம்:-695986 30 இலக்க துவிச்சக்கர வண்டி-01, வழக்கு.இல:- MC/297/MT/16, விபரம்:-இலக்கமற்ற துவிச்சக்கர வண்டி-01, வழக்கு. இல:-MC/3408/PC/16, விபரம்:-69575265 இலக்க துவிச்சக்கர வண்டி-01, ரோக்லைட்-01,மறுதவணை-04.04. 2018,மன்றின் கட்டளைப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக ஆண்டுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கழகத் தலைவர் ந.காண்டீபன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணியளவில் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் வ.கரிகரனின் நெறிப்படுத்தலில் புதிய ஆண்டுக்கான கழக நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் அ.ஆலசுந்தரம், செயலாளர் க.அருள் குமரன் பொருளாளர் செ.நிஷாந்தன், உப தலைவர்களாக ம.கிருபாகரன், சி.ஜெயகாந்தன், உப செயலாளர் அ.யூட், பிரதம விளையாட்டு அமைப்பாளர் ம.சசிகரன், நிர்வாக உறுப்பினர்களாக செ.பகீதரன், நா.சிவதர்ஷன், த.சிவசாந்தன், செ.பரம்நாத் கணக்காய்வாளர் அ.ஆதவன், கௌரவ போசகர்களாக த.மணிசுந்தரம், க.செல்வராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.(இ)

## யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சிறுவர் நாடகக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடகம் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு மேடையேறுகிறது.

ஒவ்வாரு மாதமும் கடைசி வெள்ளிக் கிழமைகளில் சிறுவர் நாடகங்களை மேடையேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவர்களின் குதூகலிப்புக் [illegible] இது அமையும்.


பரபரப்பான வாழ்க்கைச் சுமை மற்றும் கல்விச்சுமையால் அல்லலுறும் சிறுவர்களின் மனவிடுவிப்புக்கான களமாகவும் இது அமையும்.

சிறுவர்களின் உள சமூக விருத்திக்கான மகிழ்வூட்டலையும் அறிவூட்டலையும் அடிப்படையாகக் கொண்ட சிறந்த சிறுவர் நாடகங்கள் மேடையேறுகின்றன. சிறுவர்களையும் பெற்றோர்களையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கு வலம்புரி ஆசிரியரின் பதில்

03



இவையெல்லாம் நீங்கள் அறியாததல்ல. இருந்தும் ஒரு ஞாபகப்படுத்தலாகவே இவற்றைச் சொல்கின்றோம்.

ஆக, முதலமைச்சர் விக்னேஸ்வரனை அழைத்து வந்தது இரா.சம்பந்தர் ஐயாவும் கூட்டமைப்பின் இதர கட்சித் தலைவர்களுமேயன்றி, தமிழரசுக் கட்சியின் தலைவரோ அன்றி அந்தக் கட்சியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற முக்கிய நபர்களோ அல்ல.

வடக்கின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் வருவது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அறவே விருப்பம் இருக்கவில்லை.

அதனால் அவர் முதலமைச்சரைக் கடுமையாக எதிர்த்தார்.

உண்மையில் இரா.சம்பந்தரை எதிர்க்க வேண்டிய மாவை சேனாதிராசா அவர்கள், நீதியரசர் விக்னேஸ்வரனை எதிர்த்தது தான் விந்தை.

இதற்கும் காரணம் உண்டு. சம்பந்தரை எதிர்த்தால்; பல்லை நறுமி, சுட்டு விரலால் உறுக்கி உன் வேலையைப் பார் என்று அவர் சொல்லுவார்.

எனவே வல்லவனோடு மோதுவதை விட, பண்போடும் நிதானத்தோடும் இருக்கக் கூடியவரை எதிர்ப்பதே புத்திசாலித்தனம் என்ற அடிப்படையிலேயே மாவை சேனாதிராசா முதலமைச்சர் விக்னேஸ்வரனை எதிர்த்தார்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையும் கூட்டமைப்பின் தலைமையும் நீதியரசர் விக்னேஸ்வரனிடம் சென்று விடும் என்று பயந்தவர்கள், அவரைக் கடுமையாக விமர்சித்து அவரை அரசியலில் இருந்து வெளியேற்ற சதித்திட்டம் செய்தனர்.

இவற்றுக்கு மத்தியில்தான் முதலமைச்சரை இயங்கவிடாது- செயற்பட விடாது சதித்திட்டங்கள் தீட்டப்பட்டன.

இதன் உச்சக்கட்டம்தான் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை.

ஆம், மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே! இரவோடு இரவாக வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

அந்த இரவுப் பொழுதில் ஆளுநரின் அலுவலகத்திற்குச் சென்ற அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் அவரோடு சேர்ந்த சிலரும் ஆளுநரிடம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கையளித்தனர். இதற்காக இரவு முழுவதும் ஆளுநர் அலுவலகம் விழித்திருந்தது என்றால், நிலைமை எவ்வாறிருந்தது என்பதை நாம் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

எதுவாயினும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இரவோடு இரவாகக் கொண்டு வந்தது தொடர்பில் நீங்கள் நிச்சயம் கண்டனம் செய்வீர்கள் என்று நம்பிய பலரில் நானும் ஒருவன்.

என்ன செய்வது வாலியை வதம் செய்து விட்டு இராமர் மௌனமாக நின்றார் என்று நீங்கள் கூறிய கருத்து மட்டுமே நம்மை ஆற்றுப்படுத்தி நிற்கிறது.

எதுவாயினும் நீதிக்கும் நேர்மைக்கும் வலுச்சேர்க்க வேண்டி அவைத் தலைவர், தன் சபையின் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில் [illegible] ஆளுநரிடம் [illegible] போது அது தவறு என்பதையாவது கம்பவாரிதி சுட்டிக்காட்டுவார் என்றிருந்தோம். ஏனோ அதுவும் நடக்கவில்லை.



எதுவாயினும் தங்கள் தலைவனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்ததை சகிக்க முடியாத மக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

எங்கே? முடிந்தால் செய்து பாருங்கள் என்று வீறு கொண்டெழுந்தனர் எனில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை தமிழ் மக்கள் தங்கள் தலைவராக ஏற்றுள்ளனர் என்பதற்கு இதைவிட வேறு எந்தச் சான்றும் பெரிதாகாது என்பதை நீங்கள் ஏற்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குள.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்காக தமிழ் மக்கள் எழுச்சி கொண்டெழுந்தது மட்டுமன்றி தங்கள் இயல்பு நிலையை ஸ்தம்பிக்க வைத்து, இதுபோன்று முன்பு ஒருபோதும் நடந்ததல்ல என்று பலரும் கூறுமளவிற்கு மக்கள் தங்கள் தலைவரைக் காப்பாற்றினர் என்றால் இதை விட வேறு எந்தத் தகைமை ஒரு தலைவனுக்கு வேண்டும்.

எது எவ்வாறாயினும் இங்கு எழுதப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் யாரையும் நோகடிக்கவோ அன்றி அவர்களை நிந்திக்கவோ அல்ல. அத்தகையதொரு பாவ காரியத்தைச் செய்வதற்கும் நாம் தயாரில்லை. ஆனால் நாம் சொல்லதெல்லாம் சந்தர்ப்பவாத அரசியலை எவரும் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்பது தான்.

அன்புக்குரிய கம்பவாரிதி அவர்களே! இப்போது முதலமைச்சரை எதிர்ப்பதில் முன்னிற்பவர் வடக்கின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா அவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இது எதர்க்கானது என்பதையும் தாங்கள் அறியாமல் இருக்க மாட்டீர்கள் என நினைக்கின்றேன்.

சி.தவராசா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றபோது அவருக்கு மிக முக்கியத்துவம் கொடுத்தவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

அமெரிக்கத் தூதுவர்களுடன் பேச்சு நடத்துவதற்குக்கூட எதிர்க் கட்சித் தலைவர் தவராசாவை முன்மொழிந்தவர் முதலமைச்சர்.

ஒரு தலைவன் அனைவரையும் மதித்து, அவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். எதிர்க்கட்சிகளின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற உங்களின் நிலையான கருத்திலும் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் விலகிச்செல்லவில்லை.

அதேவேளை முதலமைச்சர் தன்னை முன்னுரிமைப்படுத்துவதை பெருந்தன்மையோடு பகிரங்கப்படுத்தியவர் தவராசா என்பதையும் இவ்விடத்தில் கூறியாக வேண்டும்.

இதை அவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்த போது செய்தார். எனினும் தன் தாய்க் கட்சியில் இருந்து பிரிவதென அவர் எப்போது முடிவு செய்தாரோ; இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தனக்கு இடம் கிடைக்க வேண்டும் என்று எப்போது நினைத்தாரோ அன்றுதான், தான் இசைக்கும் இராகத்தை மாற்றிக் கொண்டார்.

முதலமைச்சரை எதிர்த்தால் மட்டுமே தமிழரசுக் கட்சியில் தனக்கு கிடைக்கும் என்றபோது அவர் உண்மை நிலைக்கு மாறாக செயற்படத்தொடங்கினார்.

இப்போது தவராசா அவர்கள் சொல்லுகிறார்; முதலமைச்சர் எதுவும் செய்யவில்லை என்று. பார்த்தீர்களா இதுதான் இன்று எங்கள் மண்ணில் நடக்கிறது.

அன்று ஈ.பி.டி.பியில் இருக்கும் போது முதலமைச்சர் எங்களை கௌரவிக்கிறார். இப்படித்தான் ஒரு தலைவன் இருக்க வேண்டும் என்று கூறிய தவராசா, இன்று முதலமைச்சர் மீது குற்றம் சுமத்துகிறார். இது எதற்கானது என்பதை நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டிய தேவை இராது.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர மீனவர்களின் மீன்பிடி வலைகள் பாப்பாமோட்டை கடலில் சேதம்



மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் மீனவர்களின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன் பிடி வலைகள் பாப்பா மோட்டை கடற்பரப்பில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் கடந்த சில தினங்களாக முழுமையாக சேதப்படுத்தப் பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் கோந்தைப் பிட்டி கடற்கரையில் இருந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்காக கடலில் போடப்பட்டிருந்த தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் மீனவர்களின் பெறுமதி மிக்க மீன்பிடி வலைகளே கடந்த சில தினங்களாக இனம் தெரியாதவர்களினால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

விடத்தல் தீவு மற்றும் பாப்பாமோட்டை கடற் பிரதேசத்தில் குறித்த நகர் கிராம மீனவர்கள் பல வருடங்களாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறகு வலை தொழிலானது விடத்தல் தீவு பாப்பா மோட்டை கடற்பிரதேசத்தில் மட்டுமே மேற்கொள்ள முடியும் .

குறித்த தொழிலை மேற்கொள்ளும் போது தமக்கும் பாப்பா மோட்டை மீனவர்களுக்கும் இடையில் தர்க்கங்கள் ஏற்படுவது வழமை எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பிரச்சினைகள் சங்கத்தினூடாகவும், மீன் பிடி திணைக்களத்தினூடாகவும் கதைத்து தீர்த்துக் கொள்ளுவது வழமை.


இந்நிலையில் சுமார் 8 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய மீன் பிடி வலைகள் கடலில் வைத்து கடந்த சில தினங்களாக வெட்டப்பட்டும் அறுக்கப்பட்டும் முழுமையாக சேதப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வலைத் தொகுதிகள் மீளவும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் அந்த மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடலை யாரும் உரிமை கோர முடியாது. எங்களுடன் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டிய விடயம்.

ஆனால் இவ்வாறு வலைத்தொகுதிகள் சேதப் படுத்தப்பட்டுள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்த பாதிக்கப்பட்ட ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் தமது பாதிப்புக்கள் குறித்து அடம்பன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (2-281)

# வீடொன்றில் ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கு விநியோகிக்க வேண்டிய ஒருதொகுதி வாக்காளர் அட்டைகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

. இது குறித்து மேலும் தெரியவருவதாவது

தேராவில் பகுதியிலுள்ள வீடொன்றில் 288 வாக்காளர் அட்டைகள் இருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப் படையில் பொலிசார் தேர்தல் அலுவலக அதிகாரிகள் ஆகியோர் குறித்த பகுதிக்கு சென்று வாக்குச் சீட்டுக்களை மீட்டுள்ளதுடன் தபால் ஊழியர் மற்றும் குறித்த கிராமவாசியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (2-281)




# கிளிநொச்சி, முல்லை.,வவுனியா, மன்னாரில் தபால்மூல வாக்குப் பதிவுகள் நடைபெற்றன



(குருமன்காடு)

நாடு பூராகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப் பதிவின் முதலாம் கட்டம் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற நிலையில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுகள் நேற்றும் நடை பெற்று இன்றும் நடைபெறும்.

இந் நிலையில் நேற்றைய தினம் வடக்கு மாகாணத்தில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் தபால் மூல வாக்குப்பதிவுகள் அமைதியான முறையில் நடைபெற்றன.

இதில் வவுனியா மாவட்டத்தில் இரண்டாம் கட்ட தபால் மூல வாக்குப் பதிவில் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது வாக்குகளை பதிவு செய்தனர்.

அதனடிப்படையில் வவுனியாவிலும் அமைதியான முறையில் வாக்குப் பதிவுகள் பிரதேசசெயலகங்கள், கல்வித் திணைக்களங்கள் என்பவற்றில் நடைபெற்றது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு மூவாயிரத்து 471 அரச சேவையாளர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

இதில் உரிய முறையில் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யாமை, திணைக்கள தலைவரின் கையொப்பம் பெறாமை உள்ளிட்ட சில காரணங்களால் இருநூற்று 45 பேரின் தபால் மூல வாக்களிப்பு விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் மூவாயிரத்து 226 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றிருந் தனர்.

இதேவேளை உள்ளூராட்சி தேர்தலுக்கான இரண்டாம் கட்ட தபால் மூல வாக்குப் பதிவுகள் நேற்று முல்லைத்தீவிலும் அமைதியான முறையில் நடைபெற்றது.

இரண்டாம் கட்ட தபால் மூல வாக்குப் பதிவில் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது வாக்குகளை பதிவு செய்தனர்.

அதனடிப் படையில் முல்லைத் தீவிலும் அமைதியான முறையில் வாக்குப் பதிவுகள் பிரதேச செயலகங்கள், கல்வித் திணைக்களங்கள் ,ஏனைய அரச திணைக்களங்கள் முப்படை முகாம்கள் என்பவற்றில் நேற்று நடை பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 958 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றனர். (2-250-281)

# த.தே.கூ.தலைவர் பங்கேற்கும் பொதுக்கூட்டம் பரந்தனில் நாளை

(கிளிநொச்சி)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் விடயங்கள் குறித்து விளக்கமளிக்கும் பொதுக்கூட்டம் கிளிநொச்சி பரந்தனின் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பரந்தன் பொதுச்சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.குருகுலராசா தலைமை தாங்கவுள்ளார்.

அத்துடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர். சி.சிறீதரன் உட்பட கூட்டமைப்பு கட்சிகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப் பினர்கள்,

மாகாணசபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (2)

# துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு



(குருமன்காடு)

சுவிஸ் நாட்டில் இயங்கும் எழுகை தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வவுனியாவில் கணவன் மனைவி இருவரும் வாய்பேச முடியாத நிலையில் நான்கு பெண் பிள்ளைகளை கல்வி கற்பித்து வருகின்றனர்.

இவர்களின் குடும்பத் தலைவர் வேலைக்குச் சென்று வருவதற்காக வவுனியா பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் துவிச்சக்கர வண்டி உதவிகோரியிருந்தார்.

மகாறம்பைக்குளம் கிராமத்தில் பெற்றோரை இழந்த நிலையில் உறவினரின் பராமரிப்பில் கல்விகற்கும் இரட்டைச் சகோதரிகளுக்கும் எழுகை சுவிஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. (2-250)

# யுத்த காலத்தில் போடப்பட்ட மண் அணைகள் அகற்றப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி மேற்கு பிரதேசத்தின் ஆனைவிழுந்தான் ஐயனார் புரம்,அக்கராயன் குளம் ஆகிய பகுதிகளில் யுத்த காலத்தில் போடப்பட்டுள்ள மண் அணைகளில் வெடி பொருள் அச்சம் காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஐயனார்புரம் ஆகிய பகுதிகளில் விவசாயநிலங்கள் குளங்களின் நீரேந்து பிரதேசங்களில் யுத்த காலத்தில் போடப்பட்ட மண் அணைகள் இன்றுவரை அகற்றப்படாமல் காணப்படுகின்றன.

குறிப்பாக ஐயனார்புரம் ஆனைவிழுந்தான் பொதுமயானத்தை அண்மித்த பகுதியிலும் இதேவேளை வன்னேரிக்குளத்தை அண்மித்த பகுதியிலும் இராணுவ மண் அணைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் மண் அணைகளை அண்மித்த பகுதிகளில் வெடிபொருள் ஆபத்துக்கள் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இப்பகுதிகளில் அச்ச உணர்வுடனேயே காணிகளை துப்புரவு செய்து அவற்றை எரிப்பதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை அக்கராயன் குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் காணப் படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களின் பாஸ் நடைமுறைக்கு தீர்வு காணப்படவில்லை

## டக்ளஸ் எம்.பி.கவலை

(மன்னார்)

யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகள் நிறைவுற்றுள்ள போதிலும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் அனுமதி பெற்றே கடற்றொழிலுக்குச் செல்லவேண்டிய அவலம் இன்னும் தொடர்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கவலை வெளியிட்டுள்ளார்.


நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மன்னார் தாழ்வுபாடு பகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

வடக்கு மாகாணத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் கடற்றொழிலுக்கான அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மன்னார் மாவட்டத்தில் கடற்றொழிலுக்கான அனுமதி பெறப்பட வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையில் எமது கடற்றொழிலாளர்கள் நாளாந்த தொழிலை முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டில் நல்லாட்சியைக் கொண்டு வந்தவர்கள் தாமே என்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் பெற்றுத்தரப்படும் என்றும் மக்களிடம் வாக்குகளை கேட்டு வெற்றியைத் தமதாக்கிக் கொண்ட கூட்டமைப்பினர் எமது கடற்றொழிலாளர்களின் அன்றாட வாழ்வாதாரம் கூட பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் அதற்காக குரல் கொடுக்கவில்லை.

கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் தமது அன்றாட வாழ்வுக்கே அவலப்படும் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.



மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாஸ் நடைமுறைக்கு தீர்வு காண வேண்டுமாயின் அந்தப்பொறுப்பை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாஸ் நடைமுறை மட்டுமன்றி சுருக்குவலை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகள் பெற்றுத்தரப்படும் என்றும் சுட்டிக்காட்டினார். (2)

# மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த 7 பேர் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பொதுமக்களுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் மதுபோதையுடன் வாகனங்களைச் செலுத்தியவர்களும் மற்றும் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொது இடங்களில் நடந்து கொண்ட 7 பேரைக் கைது செய்துள்ளதுடன் வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் உள்ள நெத்தலியாற்றுப் பாலத்திற்கு அண்மையாக பொலிஸார் விசேட வீதிப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மதுபோதையில் ஆட்டோவைச் செலுத்திய சாரதி ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் ஆட்டோவையும் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் அபாயகரமான முறையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொது இடங்களில் நடந்து கொண்ட 5 பேரையும் கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் சந்தேக நபர்களை நேற்று வியாழக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார். (2-15)




# சுண்டிக்குளம் சிறு கடல் பகுதியில் பனிமூட்டத்தால் இறால் தொழில் பாதிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி சுண்டிக்குளம் சிறு கடற்பகுதியில் தொடர்ச்சியான பனிமூட்டம், குளிரான காலநிலை என்பவற்றால் இறால் தொழில் பாதிக்கப்படுவதாக இப்பகுதித் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி சுண்டிக்குளம் சிறுகடல் பகுதி தற்போது இறால் தொழிலுக்காக வழங்கப்பட்டு தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த காலங்களைப் போன்று தொழில் இல்லையெனவும் தெரிவிக்கின்ற தொழிலாளர்கள் அண்மைய நாட்களாக தொடர்ச்சியான பனிமூட்டம், குளிரான காலநிலை என்பவற்றால் இறால் பெருக்கம் குறைவாக காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடல் நீர் சூரிய ஒளிபட்டு ஓரளவு சூடாக இருக்கின்றபோதுதான், இறால் உற்பத்தி இருக்குமெனவும் கூறுகின்றனர். தற்போது இந்த இறால் பெருக்கம் குறைவாகவே காணப்படுவதாகவும் எதிர்பார்த்த தொழில் நடவடிக்கைகள் இல்லையென்றும் தெரிவித்துள்ளனர். (2-315)

# சுவாமிகுளம் வீதிக்கு போடப்பட்ட பாலம் கீழ் இறங்கி ஆபத்தான நிலையிலுள்ளது

## அதிகாரிகள் கவனத்திலெடுத்து புனரமைப்பார்களா?

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் சுவாமிகுளம் அணைக்கட்டு வீதிக்கு போடப்பட்ட பாலம் கீழ் இறங்கி ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு ஏ-35 வீதியிலிருந்து மந்துவில் கிராமத்தை நோக்கி பயணக்கின்றன சுவாமிகுளம் வீதிக்கு போடப்பட்டிருக்கின்ற பாலம் உரிய முறையில் அமைக்கப்படாமல் காணப்படுவதுடன், இரண்டு பக்கமும் மணல் இடப்படாது பாரிய குழிகளாகக் காணப்படுகின்றன.



இதனால் இப்பாலத்தின் ஊடாக பயணிக்கின்ற பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் எனப் பல தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே குறித்த பாலத்தை உரிய முறையில் புனரமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்க ஆலை, உணவு உற்பத்தி நிலையம் திறப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி குமரபுரம் பகுதியில் விவசாயத்திணைக்களத்தினால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் அரிசிமா அரைக்கும் ஆலை, பாரம்பரிய உணவு விற்பனை நிலையம் என்பன நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக் குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஆகியவற்றின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் ஒவ்வொரு விவசாயப் போதனாசியார் பிரிவிலும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட பரந்தன், குமரபுரம், பசுந்தாரகை மகளிர் விவசாய அமைப்பிற்கென விவசாய திணைக்களத்தினால் அமைத்து வழங்கப்பட்ட அரிசிமா அரைக்கும் ஆலையில் அதனுடன் கூடிய உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் பாரம்பரிய உணவு விற்பனை நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இதில் மகளிர் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயப்போதனாசிரியர் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# வீட்டினுள் நுழைந்தவர்கள் வேட்பாளரை தாக்க முயற்சி

## பொலிஸில் முறையீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரத்தினபுரம் திருவையாறு பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற சுயேட்சைக்குழுவின் ஆதரவாளர்கள் ஆறுபேர் அப்பகுதியில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளரின் வீட்டிற்குச்சென்று வேட்பாளரையும் அவரது குடும்பத்தினரையும் தாக்க முற்பட்ட சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கரைச்சிப் பிரதேச சபையில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் வீட்டிற்கு நேற்று முன்தினம் மாலை சென்ற சுயேட்சைக்குழுவின் ஆதரவாளர்கள் ஆறுபேர் குறித்த வேட்பாளர்களையும் அவரது குடும்பத்தையும் தாக்க முற்பட்டதுடன், குறித்த வேட்பாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மாவட்ட தேர்தல் ஆணையாளர் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து இரவு பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது., இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரை மண்டியிட வைத்த

# முதலமைச்சருக்கு எதிராக 31ம் திகதி ஹற்றன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பதுளை மகளிர் கல்லூரியின் பெண் அதிபரை முழந்தாளிடச் செய்தமைக்கு எதிராகவும் அதற்கு காரணமான ஊவா மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளை உடனடியாக பதவி நீக்கி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வலியுறுத்தியும் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை ஹற்றன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் பழனி திகாம்பரம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான திலகராஜ், வடிவேல் சுரேஷ் ஆகியோர் கூட்டாக அறித்துள்ளனர்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

### அமைச்சர் பழனி திகாம்பரம்

மோசடிகாரர்கள், சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக தனது வாளைச் சுழற்றப்போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அது அவருடைய மிகச் சிறந்த அறிவிப்பாகவே பார்க்கின்றோம். இவ்வாறான தலைவர்கள் இந்த நாட்டிற்கு அவசியம் என்று நாம் கூறுகின்றோம். அவ்வாறிருக்கையில் அவருடைய கட்சியைச் சார்ந்த ஊவா மாகாணத்தின் முதலமைச்சராக இருக்கின்றவர் தொடர்பில் சரியானதொரு பதிலினை அளிப்பதற்கு ஜனாதிபதி தவறியுள்ளார். சட்டத்திற்கு முரணான செயற்பாட்டினை மேற்கொண்ட முதலமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது அவரிடமிருந்து கல்வி அமைச்சு மட்டுமே மீளப்பெறப்பட்டுள்ளது. இதனையிட்டு நாங்கள் மிகவும் வேதனையடைகின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்த காலத்தில் வெள்ளை வான்கள் இருந்தன. அச்சுறுத்தல்கள் இருந்தன. ஆனால் தமிழ் அதிபர் ஒருவர் எங்கும் முழந்தாழிட்டதாக வரலாறில்லை. ஆகவே உடனடியாக தமிழ் அதிபரை முழந்தாழிடச் செய்த முதலமைச்சரை அவருடைய பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அரசசேவையாளர்கள் இந்த நாட்டுக்காகவும் மக்களுக்காவும் சேவையாற்றுபவர்கள். தற்போது அதிபர் ஒருவருக்கு இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை எடுக்காது விட்டால் எதிர்காலத்தில் அரச சேவையாளர்களுக்கு எதிராக மோசமாக அரசியல் அதிகாரம் கொண்டவர்கள் நடந்துகொள்ளும் மோசமான நிலைமையே ஏற்படும் ஆபத்துள்ளது.



இதுவொரு புறமிருக்கையில் தற்போது மாகாண கல்வி அமைச்சானது செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது முதலமைச்சர் சமார சம்பத் போன்ற மற்றுமொருவரிடத்திலேயே மாகாண கல்வி அமைச்சு கையளிக்கப்பட்டுள்ளது. தமிழ் பெண் அதிபருக்கு அநீதி இழைக்கப்பட்டமைக்கு பிராயச்சித்தம் தேடுவதற்காகவே கல்வி அமைச்சுப் பதவி செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாகாண கல்வி அமைச்சு பதவியானது செந்தில் தொண்டமானுக்கு வழங்கியமை தவறான செயன்முறையாகும். ஆகவே ஜனாதிபதி அது குறித்தும் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

முதலமைச்சர் விடயத்தில் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா மாறுபட்ட நிலைமையில் உள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினைச் சேர்ந்த ஒருவர் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பாராயின் அவர் நிச்சயமாக பதவி விலக வேண்டும். ஆனால் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் அவ்வாறு செய்தால் அதற்கு நியாயம் கற்பிக்கும் வகையில் கருத்துக்களை அவர் கூறுகின்றார். எவருக்கும் இரண்டு நிலைப்பாடு இருக்க முடியாது. அதே போன்று மேல்மாகாண முதலமைச்சரும் வேறொரு கருத்தினை கூறுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சி சரியோ, பிழையோ அக் கட்சியிலிருந்து தற்போது அமைச்சர்கள் இருவர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

ஆகவே இந்த விடயத்தில் நாம் ஜனாதிபதியிடத்திலிருந்தே நடவடிக்கைகளை எதிர்பார்க்கின்றோம். அவர் கூறுவதைப்போன்று இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருடைய வாக்குறுதிகளை நம்பியே எமது மக்கள் தமது வாக்குகளை வழங்கியுள்ளார்கள். ஆகவே அவர்களின் நம்பிக்கையை வீணடிக்கக்கூடாது என்றார்.

### வடிவேல் சுரேஷ் எம்.பி

பதுளை மகளிர் கல்லூரி பெண் அதிபரை முழந்தாளிட செய்த சம்பவம் மூன்றாம் திகதி இடம்பெற்றது. அதன் பின்னர் அச்சம்பவத்தினை மூடி மறைக்கும் நோக்குடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு கொங்கிறீட் இட்டு நிரந்தரமாக மூடுவதற்கே முயற்சித்தார்கள். ஆனால் அது முடியாது போனது. கடந்த 9ஆம் திகதி முதல் அந்த விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டு தற்போது பாராளுமன்ற தெரிவுக் குழுவிலும் விசாரணை இடம்பெற்றுள்ளது.

அந்த பெண் அதிபர் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை பகிரங்கமாக கூறியுள்ளார். எவ்வாறு முழந்தாளிட்டேன் என்று மக்கள் மத்தியில் பொலிஸாரிடத்தில், ஊடகங்களிடத்தில், வைத்தியசாலையில் பாராளுமன்ற குழுவில் என அனைத்து இடங்களிலும் அவர் குறிப்பிட்டுள்ளார். மிக அண்மையில் தனது கணவரை இழந்து தனிமையாக வாழும் ஒரு பெண்ணுக்கு இவ்வாறான அநீதி இழைக்கப்படுகின்றமையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

நாங்கள் பெண்கள் உரிமைகள் தொடர்பில் பேசுகின்றோம். பெண்களுக்கான அங்கீகாரம் வேண்டி உள்ளூராட்சி மன்றங்களில் 25சதவீத இட ஒதுக்கீடு வழங்கி சட்டங்களை நிறைவேற்றுகின்றோம். அவ்வாறெல்லாம் செய்து விட்டு பெண்களை இவ்வாறு நடத்துவது நியாயமா? ஒவ்வொரு வருடமும் கல்வி அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று வாதிக்கின்றோம். கல்விச் சேவையை வழங்கி நாளைய தலைவர்களை உருவாக்கும் ஒரு குருவுக்கு இவ்வாறு அநீதி இழைக்கப்படுவதென்றால் நாம் எங்கிருக்கின்றோம் என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள இலவசக் கல்வித்துறைக்கு என்ன நிகழ்ந்திருக்கின்றது. தேசிய கல்விக் கொள்கையை அமுல்படுத்தி உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் தாமதங்களைச் செய்ய முடியாது. விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய முடியாது. பெண் அதிபருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும் என்றார்.

### திலகராஜ் எம்.பி

ஊவா மாகாண முதலமைச்சரின் கீழ் கல்வி அமைச்சுப் பொறுப்பு காணப்பட்டாலும் தமிழ் விடயங்களை கையாள்வதற்கான பொறுப்பினை செந்தில் தொண்டமானிடத்தில் தான் முதலமைச்சர் வழங்கியிருந்தார். அவரது அமைச்சான வீதி அபிவிருத்தி அமைச்சின் கட்டடத்திலேயே தமிழ் கல்வி விடயங்களை மேற்பார்வை செய்யும் பகுதி காணப்பட்டது.


அவ்வாறான நிலையில் முதலமைச்சரிடத்தில் இருந்த கல்வி அமைச்சுப் பொறுப்பு தற்போது செந்தில் தொண்டமானிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடானது ஏற்கனவே அவரிடத்தில் அளிக்கப்பட்ட பொறுப்பினை முழுமையாக நிறைவேற்றாத நிலையில் மீண்டும் அவரிடத்தில் முழுமையாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமைச்சர் செந்தில் தொண்டமான் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக அரசசேவையில் இருந்த தபால் ஊழியர் ஒருவரை தாக்கியமை தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பில் பண்டாரவளை நீதிமன்றத்தில் நீதி விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏற்கனவே அரச சேவையாளரை தாக்கி விசாரணை நடத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் அத்தகையவொருவருடத்தில் அதிகாரம் கையளிக்கப்படுவது குறித்து ஜனாதிபதி மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

ஏற்கனவே ஆனைமடுவ பகுதியில் இத்தகைய சம்பவம் நடைபெற்றுள்ள நிலையில் அதனுடன் தொடர்புடையவருக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டமையானது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் தற்போது இச்சம்வம் குறித்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்காது விட்டால் அது பாரதூரமானதாக அமைந்துவிடும்.

ஆகவே ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கையை எடுப்பதோடு மட்டுமின்றி மாகாண அமைச்சுப்பதவி வழங்கியமை தொடர்பில் உடனடியாக தலையீடு செய்து மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

## சீனத் தூதுவர்-சபாநாயகர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான புதிய சீனத்தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஆ சாங் சுவான் மற்றும் சபாநாயகர் கரு ஜெயசூரிய இடையிலான சந்திப்பு பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் புதிய தூதுவருக்கு சபாநாயகர் வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் நட்புரீதியாக சீனா இலங்கைக்கு தொடர்ச்சியாக செய்து வரும் உதவிகளை தாம் மதிப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் இரு நாட்டுக்குமிடையிலான தொடர்பை புதிய தூதுவர் மூலம் மேலும் கட்டியெழுப்ப முடியும் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (இ-7)

## தாக்குதலுக்குள்ளான தாமரைமொட்டு வேட்பாளர் வைத்தியசாலையில்

### இருவர் கைது

(கொழும்பு)

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரப்பத்தனை வெவர்லி தேர்தல் வட்டாரத்தில் அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குத் தாமரை மொட்டுச் சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிடும் செ.ராஜ்குமார் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் மூவரால் இவர் நேற்று முன்தினம் மாலை டயகம கொலனி பகுதியில் வைத்துத் தாக்குதலுக்கு இலக்காகியதாக டயகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்கப்பட்டவர் அவரின் குழுவுடன் சென்று வாக்கு சேகரிக்கப்பதற்கு முன்பு வர்த்தக நிலையம் ஒன்றில் நாணயங்களை மாற்றுவதற்காகச் சென்ற போதே தாக்குதலுக்குள்ளாகியதாக தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை மேலும் ஒருவரைத் தேடி வருவதாகவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக டயகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# வித்தியாசமான முறையில் நீதி கேட்ட பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி







(கொழும்பு)

கண்ணகி மற்றும் காளி தெய்வங்களின் படங்களை வைத்து பூஜை செய்து வித்தியாசமான முறையில் போராட்டமொன்றை மேற்கொண்டுள்ளார் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடயின் ம்மனைவி சந்தியா.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்றுக் காலை குறித்த போராட்டத்தினை மிகவும் அமைதியான முறையில் மேற்கொண்டுள்ளார்.

பலவருடங்களுக்கு முன்னார் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் அவரது மனைவி மற்றும் உறவினர்கள் பலரிடம் நீதிகேட்டு கிடைக்காத பட்சத்தில் நீதி கோரி அமைதியான முறையில் பூஜை வாழிபாட்டில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 'சமய வாழ்வியல்' நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் எழுதிய 'சமய வாழ்வியல்'நூல் அறிமுக விழா நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணியளவில் கொழும்பு இராம கிருஷ்ண் மிஷன் விரிவுரை மண்டபத்தில் சப்ரகமுவ பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் க. நாகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும். (இ-8)

## தேர்தல்கள் ஆணைக்குழு ஆளும் தரப்பிற்கு ஆதரவு

### ஜயந்த சமரவீர பகிரங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு ஆளும்தரப்பிற்கு ஆதரவாக பக்கச்சார்பாக நடந்து கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் பத்தரமுல்லை தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜயந்த சமரவீர, போஸ்டர்கள், பெனர் போன்ற விடயங்களில் தேர்தல்கள் ஆணைக்குழு பொதுஜன பெரமுண வேட்பாளர்களுக்கு தனியான சட்டமொன்றை கடைப்பிடிக்கின்றது. அந்தச் சட்டம் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) என்பன தேர்தல் சட்டங்களை மீறி செயற்படுகின்றன. ஆனால் தேர்தல்கள் ஆணைக்குழு அதனைக் கண்டு கொள்வதில்லை.

அரசாங்கத் தரப்பினர் பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தி தேர்தல் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்கின்றனர். அமைச்சர் சஜித் பிரேமதாஸ, வீடமைப்பு அமைச்சின் வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வளங்களையும் அம்பாந்தோட்டையில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொண்டுள்ளார். ஆனால் அதனை தடுக்க யாரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

அதேபோன்று அரசாங்கத்தின் அமைச்சர்கள் நிவாரண நிதிகள், வீடமைப்புக் கடன்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். தேர்தல்கள் ஆணைக்குழு அதனையும் கண்டுகொள்ளாது பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

## கணனி இலவசப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் (Computer Hardware Technician-NVQ Level-3) இற்கான ஒரு வருட காலத்தைக் கொண்ட இலவசப் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை க.பொ.த (சா/த) இல் சித்தியடைந்திருந்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதிற்கு உட்பட்டவராகவும்இருத்தல்வேண்டும்.

தகுதி உடையவர்கள், முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA இல. 44, சோம சுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10.02.2018 இற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என யாழ். மாவட்ட [illegible] பாலன் அறிவித்துள்ளார். (இ


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/லண்டன் PR<br>தொ.இ: B/7332 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Civil Eng/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/6505 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7333 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6507 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7335 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 31 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6510 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>தொ.இ: B/7337 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 10<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/6513 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கால்நடைத் தீவன ஊழல் மூன்றாவது வழக்கிலும் லாலு பிரசாத் குற்றவாளி



(ராஞ்சி)

கால்நடைத் தீவன ஊழல் தொடர்பான மூன்றாவது வழக்கிலும் பீகார் மாநில முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் குற்றவாளி என சி.பி.ஐ. நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற சுமார் 900 கோடி ரூபாய் மதிப்பிலான கால் நடை தீவன ஊழல் தொடர்பாக முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் மேலும் சிலருக்கு எதிராக மொத்தம் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இதில், இரண்டு வழக்குகளில் லாலு பிரசாத் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டுள்ள நிலையில், சாய்பாஸா மாவட்டத்தில் உள்ள அரசு கருவூலத்தில் இருந்து ரூ.33.67 கோடி பணம் எடுத்த வழக்கு, டோரன்டா மாவட்ட அரசு கருவூலத்தில் இருந்து ரூ.184 கோடி பணம் எடுத்த வழக்கு, தும்கா மாவட்ட அரசு கருவூலத்தில் இருந்து ரூ.3.97 கோடி பணம் எடுத்த வழக்கு ஆகிய மூன்று வழக்குகளில் விசாரணை நடைபெற்று வந்தது.

இவற்றில், சாய்பாஸா மாவட்டத்தில் உள்ள அரசு கருவூலத்திலிருந்து ரூ.33.67 கோடி பணம் எடுத்த வழக்கில் வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்தது.

இதையடுத்து, இவ்வழக்கின் தீர்ப்பு ஜனவரி 24ஆம் திகதி வெளியிடப்படும் என் இவ்வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ.சிறப்பு நீதிபதி எஸ்.எஸ்.பிரசாத் அன்மையில் அறிவித்தார்.

அதன்படி நேற்று முன்தின் தீர்ப்பை வாசித்த நீதிபதி, இவ்வழக்கில் லாலு பிரசாத் குற்றவாளி என அறிவித்தார். பீகார் முன்னாள் முதலமைச்சர் ஜெகன்நாத் மிஸ்ராவும் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு வழக்குகளில் தண்டனை பெற்றுள்ள லாலு தற்போது மிர்சா முண்டா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழகத்தில் அசாதாரண சூழ்நிலை

## சட்டமன்றை உடனடியாக கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தல்



(சென்னை)

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு தமிழக சட்டமன்றத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என்று தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கோரியுள்ளார்.

சென்னையில் நேற்று வியாழக்கிழமை காலை செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

பேருந்து கட்டண உயர்வினால் அரசியல்வாதிகள் மட்டுமின்றி பொதுமக்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் என அனைவரும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

முதல்வரின் இல்லத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட போது, அவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டு கைது செய்து சென்றதை தொலைக்காட்சி மூலம் பார்த்தேன். இக்கட்டண அதிகரிப்பினால் தமிழகம் இன்று அசாதாரண சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனவே அதனை கருத்திற் கொண்டு சட்டமன்றத்தை உடனடியாக கூட்ட எதிர்க்கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கிறேன் என ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேர் தொடர்பிலான வழக்கில் மத்திய, மாநில அரசு தலையிட வேண்டும் என தான் ஏற்கனவே சட்ட மன்றத்தில் கூறியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகள் தொடர்பில் விவாதிக்க வேண்டிய தேவையுள்ளதால் சட்டமன்றம் அவசரமாக கூட்டப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-8)

# பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து

## 8 பேர் உயிரிழப்பு

(கவுதமாலா சிட்டி)

மத்திய அமெரிக்காவின் கவுதமாலா நகரில் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய அமெரிக்காவின் கவுதமாலா நாட்டிலுள்ள சான் பெரரோ நெக்டா பகுதியில் நேற்று முன்தினம் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. மலைப் பாதையில் திரும்பும் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 15 பேர் படுகாயமடைந்தனர். சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புப் படையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டு படுகாயமடைந்தவர்



களை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

விபத்துக்கான உடனடி காரணங்கள் தெரியவில்லை என கூறிய பொலிஸார், இது தொடர்பாக விசாரித்து வருகின்றனர். (இ-8)

# அமெரிக்க கூட்டுப்படைக

# ஐ.எஸ்.பயங்கரவா



(வோஷிங்டன்)

சிரியாவில் அமெரிக்கக் கூட்டுப்ப
தாக்குதலில் ஐ.எஸ்.பயங்கரவாதிக
கப்பட்டதாக தகவல் வெளியாகிய

சிரியாவில் உள்நாட்டுப் போரை பயன்படுத்தி அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் கால் பதித்தனர். அவர்கள் அங்கு அடிக்கடி தாக்குதல்கள் நடத்தி பெரும் உயிர்ப் பலிகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு மத்திய யூப்ரடிஸ் நதிப் பள்ளத்தாக்கில் உள்ள ஷபா நகரில் ஐ.எஸ்.பயங்கரவாதி கள் பதுங்கி இருந்து கொண்டு, தாக்குதல் நடத்த சதி செய்து வருவதாக அமெரிக்காவுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அமெரிக்க கூட்டுப்படைகள் கடும் வான் தாக்குதல்களை நடத்தியதாக

# ஆளில்லா விமானம்

## பாகிஸ்தானில் அமெரிக்கா

(பெஷாவர்)

பாகிஸ்தான் அமெரிக்கா அதிரடியாக ஆளில்லா விமான தாக்குதல் நடத்தியது இதில் சிக்கி ஹக்கானி பயங்கரவாத அமைப்பின் தளபதி உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடத்தி வரும் போரில், அந்த நாட்டின் கூட்டாளியாக பாகிஸ்தான் உள்ளது. இதற்காக அந்த நாட்டுக்கு அமெரிக்கா நிதி உதவியும் அளித்து வந்தது.

ஆனால் பாகிஸ்தான், தன் மண்ணில் இருந்து கொண்டு செயல்பட்டு வரும் ஹக்கானி, அல்கொய்தா, தலீபான் பயங்கரவாதிகள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமெரிக்கா குற்றம் சாட்டியது.

இந்த நிலையில், பாகிஸ்தானின் ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள வடக்கு வாஜிரிஸ்தான் பகுதியில், ஹங்கு மாவட்டத்தில் ஆப்கானிஸ்தான் அகதிகள் தங்குமிடத்தில் ஹக்கானி பயங்கரவாத அமைப்பின் தளபதியும், அவரது கூட்டாளிகளும் பதுங்கி இருப்பதாக அமெரிக்காவுக்கு உளவு தகவல் கிடைத்தது.

உடனே அதிரடி நடவடிக்கையில் இறங்கியது. அங்கு ஆளில்லா விமானத்தை களம் இறக்கியது. அந்த ஆளில்லா விமானம் ஹக்கானி இயக்க பயங்கரவாதிகள் தங்கி இருந்த வீட்டின் மீது ஏவுகணை வீசி தாக்கியது. இந்த தாக்குதலில் ஹக்கானி இயக்கத்தின் தளபதி என அறியப்படு

# ஹபீஸ் சயீத்தை கைது செ

## லாகூர் நீதிமன்றம் உத்தரவு

(லாகூர்)

மும்பையில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஜமாத் உத்-தவா தீவிரவாத அமைப்பின் தலைவனான ஹபீஸ் சயீத்தை கைது செய்வதற்கு தடை விதித்து லாகூர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாகிஸ்தானைச் சேர்ந்த 10 தீவிரவாதிகள் கடல் மார்க்கமாக இந்தியாவுக்குள்நுழைந்து மும்பையில்கடந்த 26.11.2008 அன்று குண்டுகளை வெடித்தும், துப்பாக்கியால் சுட்டும் கொடூரத் தாக்குதல்கள் நடத்தினர். 150இக்கும் மேற்பட்டோர் கொன்று குவிக்கப்பட்ட இந்த தாக்குதல்களை பாகிஸ்தானில் அமர்ந்து கொண்டு, மூளையாக இருந்து செயல்படுத்தியவன் ஹபீஸ் சயீத்.

லஷ்கர் இ தொய்பா என்ற தீவிரவாத இயக்கத்தின் நிறுவனரான இவன், அந்த இயக்கத்துக்கு பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்ட நிலையில், தற்போது ஜமாத் உத்தவா என்ற பெயரில் அரசியல் இயக்கத்தை நடத்தி வருகிறான்.



இதைத்தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு குழு 2008இல் வெளியிட்ட தீவிரவாதிகளின் பட்டியலில், ஹபீஸ் சயீதின் பெயரையும் சேர்த்தது.

மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹபீஸ் சயீதை கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இந்தியாவின் கோரிக்கைக்கு அமெரிக்காவும் குரல் கொடுத்து வந்தது.

# மீண்டும் போட்டியி

(கராகஸ்)

வெனிசுவெலாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதை அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை போக்குவரத்து தொழிலாளர்களின் பேரணி ஒன்றில் கருத்து தெரிவிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...டகளின் மூர்க்க தாக்குதலில் ...ாதிகள் 150 பேர் பலி!



...கூட்டுப்படைகள் நடத்தி மூர்க்கத்தனமான ...கரவாதிகள் 150 பேர் கொன்று குவிக் ...ளியாகியுள்ளது.

...வும், அவற்றில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 150 பேர் கொன்று குவிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அமெரிக்க கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், "ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆக்கிரமித்து வைத்து இருந்த பகுதிகளை குறிவைத்து, கூட்டுப் படைகள் ஷபா நகரில் வான் தாக்குதல்களை நடத்தின.

இதில் 150 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர் எனவும் இதை அமெரிக்க கூட்டுப் படைகளின் செய்தி தொடர்பாளர் கர்னல் ரேயான் தில்லான் உறுதி செய்தார். (இ-8)

## ...ம் மூலம் ...ா தாக்குதல்

...கிற எஹ்சான் என்ற கவாரியும், அவரது கூட்டாளிகள் 2 பேரும் கொல்லப்பட்டனர்.

இது ஹக்கானி பயங்கரவாத இயக்கத்துக்கு விழுந்த பலத்த அடியாக அமைந்துள்ளது.

தனது மண்ணில் அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்துவது, தனது இறையாண்மையை மீறிய செயல் என்று பாகிஸ்தான் அரசு தொடர்ந்து கூறிவருவதும், அதைக் கண்டுகொள்ளாமல் அமெரிக்கா ஆளில்லா விமான தாக்குதல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## ...செய்ய தடை




அமெரிக்காவும், இந்தியாவும் கொடுத்த தொடர் நெருக்கடியால் பாகிஸ்தான் அரசு, கடந்த ஆண்டு ஹபீஸ் சயீதை கைது செய்து, வீட்டுச் சிறையில் வைத்தது. ஆனாலும் அவன் விடுதலை செய்யப்பட்டான்.

இதற்கிடையே, தடை செய்யப்பட்ட தீவிரவாதிகளை கட்டுப்படுத்துவதில் பாகிஸ்தான் எடுக்கும் நடவடிக்கைகளை பார்வையிட, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழு இஸ்லாமாபாத் வருகிறது. இதனால் எந்த நேரத்திலும் தான் கைது செய்யப்படலாம் என்பதால், தன்னை கைது செய்யக்கூடாது எனக்கோரி லாகூர் உயர் நீதிமன்றத்தில் ஹபீஸ் சயீத் மனு தாக்கல் செய்தான்.

இந்நிலையில், அந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி, மறு உத்தரவு வரும்வரை ஹபீஸ் சயீத்தை கைது செய்ய தடை விதிக்கப்படுகிறது என உத்தரவிட்டார். (இ-8)

## ஊழல் வழக்கில் மேன்முறையீடு

## முன்னாள் ஜனாதிபதிக்கு கூடுதல் தண்டனை!



(பிரேசில்லா)

ஊழல் மற்றும் பண முறைகேடு வழக்கில் தனக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக பிரேசில் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலாவு மேல்முறையீடு செய்ததில் கூடுதல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான பிரேசிலில் 2003 முதல் 2010 வரை ஜனாதிபதியாக பதவி வகித்தவர் லூயிஸ் இனாசியோ லூலா. இவரது பதவிக்காலத்தில் ஊழல் மற்றும் சட்ட விரோதமாக பணப்பறிமாற்றம் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து அவர் மீதான வழக்கு அந்நாட்டு நீதிமன்றத்தில் நடந்தது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் இந்த வழக்கின் மீதான தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அதில், முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது. மேலும், 9 1/2 ஆண்டுகள் அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்திருந்தார்.

இவ்வழக்கின் மீதான தீர்ப்பு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில், கீழமை நீதிமன்றம் அவரை குற்றவாளியாக அறிவித்தது உறுதிப்படுத்தப்பட்டது. 9 1/2 ஆண்டுகள் சிறை தண்டனையை 12 ஆண்டுகளாக நீட்டித்து தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதனால், அவர் அந் நாட்டின் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ-8)

## ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு

### விசாரணைகளை எதிர்கொள்கிறார் ட்ரம்ப்!



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சிறப்பு விசாரணை ஆலோசகரின் விசாரணைகளுக்கு எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தமது சட்டத்தரணிகளில் ஒப்புதலுடன் இன்னும் ஓரிரு வாரங்களில் நீதித்துறையின் சிறப்பு விசாரணை அதிகாரியான றொபர்ட் மியுலர் தன்னிடம் விசாரணைகளை நடத்தலாம் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களிடம் இது தொடர்பாக பேசிய ட்ரம்ப், விசாரணைகளுக்கு முழுமையாக தயாராக இருப்பதாகவும் அதனை விரைவாக எதிர்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். இந்த விசாரணை எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக ட்ரம்ப் தரப்பு சட்டத் தரணிகள் ஏற்கனவே றொபர்ட் மியுலருடன் ஆலோசித்து உள்ளதாகவும் நேர்காணல் போன்றோ அல்லது உரையாடலாகவோ அல்லது எழுத்து பூர்வமாகவோ மேற்படி விசாரணை நடத்தப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

அமெரிக்க அரசின் தலைமை சட்டத்தரணியான ஜெஃப் செஷன்ஸ் கடந்த வாரம் மியுலரால் பல மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அதேவேளை மியுலரின் விசாரணைகளின் ஒருபகுதியாக, அமெரிக்க முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் ஃப்ளின், ட்ரம்பின் பிரசாரக் குழுவின் முன்னாள் மேலாளர் போல் மனஃபோர்ட், மனஃபோர்ட்டின் தொழில் கூட்டாளி ரிக்கேட்ஸ் மற்றும் ட்ரம்ப்பின் மற்றுமொரு பிரசார ஆலோசகரான ஜோர்ஜ் பாபடோ போலஸ் ஆகியோர் குற்றச்சாட்டுக்களை எதிர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

## ஐ.எஸ். தீவிரவாதியான இந்திய வம்சாவளி நபர் சர்வதேச குற்றவாளி



(லண்டன்)

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பிலுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரை சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலில் அமெரிக்கா இணைத்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் வசித்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சித்தார்த்தா தர் என்பவன் முஸ்லிம் மதத்துக்கு மாறினார். தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்ட சித்தார்த்தா, பிரிட்டனில் இருந்து தப்பி சிரியாவுக்கு சென்று ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் சேர்ந்தார். தனது பெயரை அபு ருமாய்ஷா என்றும் மாற்றிக் கொண்டான்.

இங்கிலாந்துக்கு ஆதரவாக உளவு பார்த்ததாக கூறி பலரை முகமூடி அணிந்து கழுத்தை அறுத்துக் கொலை செய்து அதன் வீடியோ காட்சிகளையும் வெளியிட்டான். ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் புதிய 'ஜிகாதி ஜான்' ஆக உருவெடுத்தான்.

இந்நிலையில் சித்தார்த்தா தர் என்ற அபுருமாய்ஷாவை சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்து அமெரிக்கா அறிவித்துள்ளது. மேலும், அவனுடன் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த அப்தெலதீப் கைனி என்ற நபரையும் சர்வதேச தீவிரவாதியாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன்மூலம் இவர்களது சொத்துக்கள் முடக்கப்படுவதுடன் அவருடன் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## ...யிடுவதில் நிக்கோலஸ் மதுரோ உறுதி



...போதே அவர் இதனை அறிவித்துள்ளார்.

இதன்போது, எதிர்வரும் 2019 முதல் 2025 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான ஜனாதிபதி வேட்பாளராக நான் போட்டியிடவுள்ளேன்.

வெனிசுவேலாவின் தொழிலாளர் வர்க்கத்திற்கு வேட்பாளராக இருப்பேன் என்று சத்தியம் செய்கின்றேன். நாட்டை உண்மையாக நேசிப்பவர்களில் ஏழைகள், தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்களின் தலைவராக நான் தொடருவேன் என்றும் உறுதியளிக்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வெனிசுவேலாவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு அரசை நீடிக்கும் கடிதம் கிடைக்கவில்லை

## சபாநாயகர் தெரிவிப்பு



**(கொழும்பு)**

**கூட்டு அரசாங்கம் தொடர்பான உடன்பாடு நீடிக்கப்படுவது தொடர்பான எந்தக் கடிதமும் தமக்குக் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

கூட்டு அரசாங்கத்தை அமைக்கும் உடன்பாடு புதுப்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் அதற்கான கடிதம் கிடைத்துள்ளதா? என்று நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பி.உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிலையில், கூட்டு அரசாங்கத்தை அமைக்கும் உடன்பாடு காலாவதியாகி விட்ட நிலையில், அரசியலமைப்பில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட, அமைச்சரவை, இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களை பதவியில் வைத்திருப்பதன் மூலம் அரசியலமைப்பை அரசாங்கம் மீறி விட்டது என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன குற்றஞ்சாட்டினார்.

ஐ.தே.கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டு அரசாங்கத்தை அமைக்கும் உடன்பாடு கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகி விட்டது என்றும் எனவே, அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆக மட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஊவா தமிழ்க்கல்வி அமைச்சு

# கீரியிடம் பிடுங்கி நரியிடம் கொடுக்கப்பட்டுள்ளது

## சுரேஷ் எம்.பி. விசனம்



(கொழும்பு)

ஊவா மாகாண சபை தமிழ்க் கல்வி அமைச்சானது கீரியிடம் இருந்ததைப் பிடுங்கி நரியிடம் கொடுக்கப்பட்ட கதையாக மாறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஊவா மாகாண தமிழ்க்கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமான் 2 வருடங்களுக்கு முன்பு பண்டாரவளை நகரில் வைத்து அரச பணியாளரான தபால் ஊழியர் ஒருவரைத் தாக்கி பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் தற்போதும் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், அதிபரை முழங்காலிட வைத்த விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஊவா மாகாண சபை முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவின் பதவியை எவ்வாறு செந்தில் தொண்டமானுக்கு வழங்க முடியும் எனவும் சுரேஷ் கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் பிறந்து வளர்ந்து, மலைநாட்டு சூழலில் வளர்ந்த இலங்கை கலாசாரத்தை பின்பற்றும் ஒருவருக்கே தமிழ்க்கல்வி அமைச்சராவதற்குரிய தகுதி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பாடசாலை அதிபர் விடயத்தில் முதலமைச்சருக்கு எதிராக ஜனாதிபதி எடுத்துள்ள மாற்று நடவடிக்கைக்கு எதிர்ப்பினை தெரிவிப்பதாகவும், குறித்த விடயத்தில் சிறந்த முடிவினைப் பெற்றத்தரக் கோரியும் எதிர்வரும் 31ஆம் திகதி ஹற்றன் நகரில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாகவும் இதில் அனைவரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும் என்றும், அவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# அமைச்சர் ஹக்கீமின் செயலாளர் ரஹ்மத் மன்சூரின் வாகனம் தீக்கிரை



(கொழும்பு)

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இணைப்பு செயலாளரும் கல்முனை மாநகர சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் 16ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளருமான ரஹ்மத் மன்சூரின் வாகனம் இனந் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் கல்முனை செய்லான் வீதியில் இடம்பெற்றுள்ளது. வாகானம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

ரஹ்மத் மன்சூரின் சொந்த வாகனமான மொண் டிரோ ஜீப், குறித்த வீதியில் அமைந்துள்ள அவரது சாரதியின் வீட்டுக்கு அருகிலுள்ள நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே தீயிடப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கல்முனை பொலிசார் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் மகனான ரஹ்மத் மன்சூர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# உடல் மொழி

ஆயிரமாயிரம் வார்த்தைகளால் சொல்ல முடியாத விடயங்களைச் சிறு உடல் அசைவுகள் மூலம் சொல்லிவிட முடியும்.

புன்னகை என்பது ஓர் உடல்மொழிதான். வணக்கம் தெரிவிப்பதும் ஓர் உடல்மொழிதான். அலட்சியப்பார்வையும் உடல்மொழிதான்.

உடல் மொழியைக் கவனமாகப் பயன் படுத்தினால் அது நமக்குப் பலவிதங்களில் நல்லது.

நமக்கு யார் மீதாவது மிகுந்த மரியாதை உண்டென்றால் அவர்கள் வரும் நேரம் நாம் எழுந்து அவர்களை வரவேற்கின்றோம். சற்றே மரியாதைக்குரியவர்கள் என்றால் கால் மீது போட்டிருக்கும் மற்றொரு காலை எடுத்து விடுகிறோம். நண்பர் என்றால் சற்றே நகர்ந்து அமர்ந்து அவரையும் அமரும்படி கையைக் காட்டுகின்றோம். முன்பின் அறியாதவர் என்றால் நாம் எப்போதும் போல் இயல்பாக இருக்கிறோம். எதிரி என்றாலோ வெறுப்புடன் நோக்கிவிட்டு வேறு திசைக்குத் திருப்பிக் கொள்கின்றோம்.

வாய் வார்த்தை இல்லாமல் நம் சிறு அசைவுகளை வைத்தே நாம் அவர்களை எந்த அளவிற்கு விரும்புகின்றோம் அல்லது வெறுக்கிறோம் என்பதை உணர்த்த முடியும் என்கிற போது, இந்த உடல்மொழியை ஏன் சரிவரப் பயன்படுத்தக் கூடாது?

ஒருவர் ஒன்றைச் சொல்லும்போது நாம் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தால் ஒன்று அவரைப் பிடிக்கவில்லை என்று பொருள். அல்லது அவர் சொல்லும் விடயம் பிடிக்கவில்லை என்று பொருள்.

நம்முடைய விரும்பத்தகாத உணர்வுகளை நாம் வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாது. வெளிக்காட்டினால் அது நமக்கு நன்மை செய்யாது.

முற்றிலும் புதிய ஒருவர் அறிமுகப்படுத்தப்பட்டால் அவரவர் மத முறைப்படி வணக்கம் தெரிவிக்கலாம். புன்னகையும் சேர்ந்து கொள்ள வேண்டும். நாமும் அறிமுகம் செய்யப்பட்டவரும் பேசப்போகும் நேரம் குறைவு. ஆனால் வணக்கம் சொல்லும் முறை நன்றாக இருந்தால் அந்த நொடியே அவரைக் கவர்ந்துவிட முடியும்.

பலபேர் சிரிக்கக் கூடச் சில்லறை கேட்கிறார்கள். பெண்களிடம் பெண்களும் ஆண்களிடம் ஆண்களும் நன்கு சிரித்துப் பேச வேண்டும். சிரித்துப் பேசினால் நாம் அனைவரையும் கணப்பொழுதில் கவர்ந்துவிடலாம்.

உடம்பு பல பேருக்கு வளைவது இல்லை. அசைவது, நகர்வது, எழுவது என்றாலே இவர்களுக்குக் கசப்பாக இருக்கிறது.

டாக்டர் வீட்டில் அமர்ந்திருக்கிறீர்கள். ஒருவர் அருகே அமர வருகின்றார். லேசாக இடம் நகர்ந்து (ஏற்கனவே இடம் இருந்தாலும்) கொடுங்கள். அவரை உங்களுக்கு மிகப் பிடித்துவிடும்.

ஒருவரைப் பார்க்கப் போகின்றோம். அவர் இல்லை. நாம் காத்திருக்கின்றோம். அவர் உள்ளே நுழைந்ததும் நாம் எழுந்துவிட வேண்டும். காரணம் அவரது இடம் அவரது கோட்டை. உடனே அவர் உட்காருங்க உட்காருங்க என்பார் சிறு பதற்றத்துடன்.

அதன்பின்பு உபசரிப்பு நன்றாக இருக்கும். நாம் வந்த காரியம் முடிந்துவிடும். கால் மீது கால் போட்டுக் கொண்டு வாய்யா ஜேம்சு என்ற பாணியில் உட்கார்ந்திருந்தால் உடையவருக்கு எரிச்சல்தான் உண்டாகும். வந்த காரியமும் நடவாது.

கண்களில் வியப்பைப் பொழிதல், பாசத்தை வெளிக்காட்டுதல்; எழுந்து கதவைத் திறந்து விடுதல், காரின் கதவைச் சாத்திவிடுதல், ஒதுங்கி வழிவிடுதல், பொது இடங்களில் முன்பின் அறியாதவர்களிடம் கூட உடல்மொழியால் நல்ல பெயர் வாங்க முடியும். அந்தச் சூழ்நிலையை இனிதாக்கும் இவற்றை இயன்ற போதெல்லாம் செய்து பாருங்கள். அப்புறம் பாருங்கள். இவை செய்கிற வேலையை!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ்ப்பெண் அதிபர் மண்டியிட்ட விவகாரம்

# ஊவா முதலமைச்சரின் செயற்பாடு

# நாட்டுக்கு பாரிய அபகீர்த்தி

## நாடாளுமன்றில் துயரம்; சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பதுளையில் தமிழ் பெண் அதிபர் ஒருவருக்கு ஏற்பட்ட நிலை நாடாளுமன்றத்தில் பதிவாகிய ஒரு துயரச் சம்பவமாக நான் பார்க்கின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண முதலமைச்சரின் செயற்பாடு நாட்டுக்கு பாரிய அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மலையக பிரதேசத்தில் உள்ள ஒரு பெண் அதிபரை தனது அலுவலகத்திற்கு அழைத்து மண்டியிட வைத்த ஊவா மாகாண முதலமைச்சர் நாட்டிற்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறான முதலமைச்சருக்கு எதிராக பிரதமரும் ஜனாதிபதியும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நான் வலியுறுத்துகின்றேன் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

மேலும், குறித்த பெண் அதிபர் நாடாளுமன்ற வளாகத்திற்கு வந்து தனக்கு நேர்ந்த அவல நிலையை எடுத்துரைத்தமை நாடாளுமன்றத்தில் பதிவாகிய ஒரு துயரச் சம்பவமாக நான் பார்க்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இ.போ.ச.பேருந்து மீது கல்வீச்சு




(கொழும்பு)

கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்து சபையின் சிலாபம் பேருந்து டிப்போவுக்கு சொந்தமான பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6.10 மணியளவில் சிலாபம்- கொழும்பு வீதியின் காக்காப்பள்ளி சந்திக்கு அருகில் வைத்து இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆட்டோவில் வந்தவர்களே இவ்வாறு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதலால் பேருந்தின் முன்பகுதிக்கு சேதம் ஏற்பட்டுள்ள போதிலும், இதில் பயணித்த பயணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. (இ-7)

## சிறார் துஷ்பிரயோக வழக்குகளுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்கப்படும்

(கொழும்பு)

காலதாமதமாகின்ற சிறார் துஷ்பிரயோக வழக்குகளுக்கு இலவசமாக சட்ட உதவி வழங்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

1929 என்ற இலங்கை சிறுவர் தொடர்பாடல் சேவையை தொடர்பு கொள்வதன் மூலமாக எந்தவொரு நபருக்கும் சட்ட உதவி பெற்றுக்கொள்ள முடியும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சிறார் துஷ்பிரயோக வழக்குகள் காலதாமதமாகுவது தற்போதைய சூழ்நிலையில், முகம்கொடுக்கும் பிரதான பிரச்சினையாக மாறியுள்ளது.

அதற்கான உடனடி பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன் முதல் கட்டமாக, இவ்வாறு காலதாமதமாகின்ற சிறார் துஷ்பிரயோக வழக்களுக்கு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் சட்ட உதவிகளை இலவசமாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### 90 ஆசிரிய மாணவர்கள் வைத்தியசாலையில்

## புலதிசிபுர கல்வியியற் கல்லூரி ஒரு வாரத்துக்கு பூட்டு!

(கொழும்பு)

புலதிசிபுர கல்வியியற்கல்லூரியானது நேற்றுத் தொடக்கம் ஒருவாரத்துக்கு தற்காலிகமாக மூடப்படுவதாக அதன் பீடாதிபதி கே.ஏ.குணபால தெரிவித்துள்ளார்.

குறித்த கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரியர் பயிலுநர்களுக்கு காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு என்பன ஏற்பட்டுள்ளதால் சுகாதா ரப் பிரிவின் ஆலோசனைக்கு அமைய இது மூடப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காய்ச்சல் மற்றும் வயிற்றுப் போக்கு தொற்றுக்கு இலக்கான 90 பேர் ஆசிரியர் பயிலுநர் மாணவர்கள் நேற்று முன்தினமும் அதற்கு முதல் நாளும் பொலநறுவை தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெட் ஸ்கேனர் இலங்கையில்

### சுகாதார அமைச்சர் தகவல்




(கொழும்பு)

பொதுமக்களின் நன்கொடையில் கொள்வனவு செய்யப்பட்ட பெட் ஸ்கேனர் இயந்திரம் இலங்கை வந்தடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் பயன்பாட்டுக்காக இந்த பெட் ஸ்கேனர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கதீஜா பவுண்டேசன் ஸ்தாபகர் அல்ஹாஜ் முஹம்மத் என்பவர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட தன் மகனின் விருப்பத்துக்கு அமைவாக பெட் ஸ்கேனர் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்யும் நோக்கில் நிதி திரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதன் மூலம் திரட்டப்பட்ட சுமார் 200 மில்லியன் ரூபா நிதி கடந்த ஆண்டு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கமைய ஜேர்மானிய நிறுவனம் ஒன்றில் இருந்து குறித்த பெட் ஸ்கேனர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாக குறித்த இயந்திரத்தை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பொருத்தி செயற்பட வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். புற்றுநோய் தொடர்பான மிகச்சிறிய கலங்களையும்கண்டறியும்ஆற்றல்கொண்ட குறித்த இயந்திரத்தின் மூலம் மாதமொன்றுக்கு 100 பேர் வரையில் ஸ்கேன் பரிசோதனைக்குட்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெட் ஸ்கேனர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்யக் காரணமாக அமைந்த அல்ஹாஜ் முஹம்மத்தின் புதல்வர், பெட் ஸ்கேனர் இலங்கை வரமுன்னரே இறையடி சேர்ந்த சோக சம்பவமும் இதன் பின்னணியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மதில் இடிந்து விழுந்து 2 வயது சிறுவன் பலி!

(கொழும்பு)

அநுராதபுரம் மயிலகஸ் சந்திப் பகுதியில் வீடொன்றை சுற்றி அமைக்கப்பட்டிருந்த மதில் ஒன்றின் பகுதி இடிந்து விழுந்ததன் காரணமாக 2 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது சகோதரியுடன் வீட்டுத்தோட்ட மதிலுக்கு அருகாமையில் விளையாடிக்கொண்டிருக்கும் போதே மதில் உடைந்து சிறுவனின் மீது விழுந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் வேளையில் உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் சகோதரிக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் எந்த விசாரணைக்கும் நான் தயார்

## அஜித் நிவாட் கப்ரால் அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக தான் பதவி வகித்த காலத்தில் நடந்த எந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளுக்கும் தயாராக இருப்பதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மீண்டும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். கடந்த காலத்தில் நடந்தவற்றை விசாரிப்பதற்கு முன்னதாக வெளியாகியுள்ள தற்போதைய அரசாங்கத்தின் பிணைமுறிப் பத்திர ஊழல் குறித்து விசாரணை நடத்த வேண்டும் எனவும் கப்ரால் வலியுறுத்தினார். மகிந்த அரசாங்கத்தின் காலத்தில் நடந்த பிணைமுறிப் பத்திர கொடுக்கல் வாங்கல்களில் 4 ஆயிரம் பில்லியன் ரூபா மோசடி நடந்துள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அஜித் நிவாட் கப்ரால் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)




# இலங்கைக் கடலுக்குள் வெளிநாடுகளின் படகு அத்துமீறி நுழைந்தால் 17.5 கோடி ரூபாய் தண்டம்

## துறைசார் அமைச்சர் அமரவீர அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக் கடற் பரப்புக்குள் அத்துமீறி வெளிநாட்டுப் படகுகள் நுழைந்ததால் கூடிய தொகை தண்டப் பணத்தை அறவிடுவதற்கான சட்டமூலமொன்று கொண்டு வரப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி, 60 இலட்சம் முதல் 17.5 கோடி ரூபாய் வரை தண்டப்பணம் அறிவிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் படகில் மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றை வெளியில் வைத்திருந்தால் 40 இலட்சம் முதல் 15 கோடி வரை தண்டப் பணம் அறவிடவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நால்வர் இலங்கை மருத்துவ சபைக்கு

(கொழும்பு)

இலங்கை மருத்துவ சபைக்கு 4 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்தலின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த தேர்தலுக்கு 13 மருத்துவர்கள் போட்டியிட்டிருந்ததுடன், அதில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் நான்கு பேர் அதிக வாக்குகளால் இலங்கை மருத்துவ சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி டாக்டர் அநுருத்த பாதெனிய 6254 வாக்குகளைப் பெற்று இலங்கை மருத்துவ சபைக்கு தெரிவாகியுள்ளார்.

அதேவேளை வைத்தியர் நலிந்த ஜேரத் 5676 வாக்குகளைப் பெற்றுள்ளதுடன், வைத்தியர் ஹரிஸ் பதிரகே 5250 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

வைத்தியர் நவீன் டி சொய்சா 5117 வாக்குகளைப் பெற்றுள்ளார். அதன்படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இந்த நான்கு வேட்பாளர்களும் இலங்கை மருத்துவ சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ சபையின் பதிவாளர் வைத்தியர் டெரன்ஸ் காமினி டி சில்வா தெரிவித்தார். (இ-7)

# டெங்கால் 22 நாட்களில் 4 ஆயிரத்து 271 பேர் பாதிப்பு

(கொழும்பு)

டெங்கு நோயினால் கடந்த 22 நாட்களில் 4 ஆயிரத்து 271 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் தடுப்பு பிரிவின் தகவல்கள் இதனைத் தெரிவித்துள்ளன. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் 4 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் அதிக டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தொழில் திணைக்களத்தில் பணிகள் மீண்டும் வழமைக்கு

(கொழும்பு)

கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் திணைக்களத்தில் தற்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலுள்ள அங்கத்தவர்களின் பணத்தை மீளப்பெறுவதற்கான பணிகள் வழமை போல்நடைபெற்று வருகின்றன.

ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களின் அங்கத்தவர்களின் பணத்தை மீளப் பெறுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணி மற்றும் இதர நடவடிக்கைகளும் கணனி கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று முன்தினம் காலை தடைப்பட்டன. இதனால் தூர இடங்களிலிருந்து வந்திருந்த பலர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

கணனிக்கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறை சரி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து திணைக்களத்தின் அனைத்துப் பணிகளும் வழமைபோன்று நடைபெறுவதாக திணைக்களத்தின் ஊடகப் பணிப்பாளர் தம்மிக்க தெரிவித்தார். (இ-7)

# ஊழலற்ற அரச சேவையை உருவாக்க நடவடிக்கை

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு



(கொழும்பு)

அரச சேவையிலிருந்து ஊழலை முற்றாக ஒழிக்கும் நோக்கில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டிருக்கிறது. அரச சேவையை வலுப்படுத்துவதன் மூலம் அரச நிர்வாகமும் வலுவடையும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் [illegible] நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைய, அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு முதல் நில விவந்த ஓய்வூதிய சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டிருக்கிறது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையினால் அரச சேவைகள் சுயாதீனமாக இயங்குகின்றன. அரச ஊழியர்களுக்கு வெளிநாடுகளிலும் பயிற்சி வழங்கப்படவிருக்கிறது.

அக்ரஹார காப்புறுதி முறைமை ஓய்வூதியம் பெறுவோருக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அரச ஊழியர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்யும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

அரச சேவையிலிருந்து ஊழலை முற்றாக ஒழிக்கும் நோக்கில் தமது அமைச்சு இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுடன் இணைந்து விசேட வேலை த்திட்டத்தை அமுல்படுத்தப்படவுள்ளது" என தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதார நடவடிக்கைகளை தாம் கையாளவில்லை என ஜனாதிபதி கூறுவாராயின், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போது. மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை கடந்த மூன்று ஆண்டுகளாக பிரதமர்தான் கையாண்டார் என நிறைவேற்று அதிகார ஜனாதிபதியினால் கூற முடியாது.

அப்படியாயின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், ஜே.வி.பியினரும் இணைந்தே இந்த அரசாங்கத்தை அமைத்ததாகவும் அவர்கள், அரசாங்கத்தை விமர்சிப்பதுபோல பாதுகாப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் செ.இளங்கோ தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும், யாழ். பொலிஸ்துறை கணக்காளர் அ.கலைச்செல்வன், சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேசசபை (புத்தூர்) செயலர் யு.ஜெலீபன், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும், புத்தூர் கிழக்கு ஜே/278 கிராம அலுவலர் வி.கோபாலதாஸ், பரிசில் வழங்குநராக யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை பிரேமிலா கலைச் செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8)

## அளவெட்டி சைவவாலிபர் சங்க 100 ஆவது பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் 100 ஆவது பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அளவெட்டி கும்பிழாவளைப்பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் இ.நாகேந்திரம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மகாஜனக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.அனந்தசயனன் சிறப்பு விருந்தினராக யாழ். யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1312

Search for people, places and things Nagendram Home

### கஜா

அருமையான புகைப்படம் இன்று நீங்கள் பார்ப்பது



வெயிலில் பிரார்த்தனை செய்யும் கணவருக்கு தன் நிழல் தந்து பாதுகாக்கும் மனைவி..

### நிரோஸ்


பாவங்களும் செருப்பும் ஒன்றுதான்



சாமி கும்பிடும் போது கழற்றி வைச்சிட்டு திரும்ப வெளிய வரும்போது மாட்டிக்கொள்கிறோம்

### ரூபி

என்னதா ஒன்லைன்ல நியூஸ் படிச்சாலும்...



டீக்கடைல அடுத்தவன் பேப்பர எட்டிப் பார்த்து படிக்கிற சுகமே தனி...

### கிருபா

வெயிட்பண்ணு சிக்னல் விழுந்ததும் போவோம்...



-யாரோ

இல்லைன்னா கழுதைங்க ரூல்சை மதிக்கலைன்னு பேசுவானுங்க...

### சஞ்சீவ்

கார் வாங்குவதற்கு பணக்காரனா இருக்கனும்னு அவசியம் இல்லை



குழந்தையா இருந்தாலே போதும்

### கவிதா

விளையாடுவதை நாம் நிறுத்தும் போது..



யாரோ

நம்மை வைத்து விளையாட ஆரம்பிக்கிறது இந்த வாழ்க்கை...😊 😊

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய ஜனாதிபதிக்கு இலங்கையில் சிறப்பு வரவேற்பு





(ஜகார்த்தா)

இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ இரண்டு நாட்கள் அதிகார பூர்வ பயணமாக நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கையை வந்தடைந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரிலேயே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சிறப்பு விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தோனேஷிய ஜனாதிபதியை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, வரவேற்றார்.

இந்தோனேஷிய ஜனாதிபதியுடன், 50 பேர்கொண்ட வர்த்தகப் பிரதிநிதிகள் குழு வொன்றும் கொழும்பு வந்துள்ளது.

இந்தோனேஷிய ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் 21 பீரங்கிக் குண்டுகள் முழங்க ஆயுதப்படைகளின் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி இலங்கை-இந்தோனேஷிய ஜனாதிபதிகளுக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றது. (இ-7)

# ஜப்பான் வர்த்தக கைத்தொழில் சபை பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் வர்த்தக, கைத்தொழில் சபை பிரதிநிதிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

இதன்போது ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் நீண்டகால நட்புறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அந்த நாட்டால் வழங்கப்படும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜி-8 மாநட்டில் சந்தித்த ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே இலங்கை மீது கொண்டிருந்த நட்புறவினை தான் மிகவும் பாராட்டுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜப்பானின் ஜெய்க்கா (JAICA) நிறுவனத்தினால் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் ஒத்துழைப்பினை இதன்போது பாராட்டிய ஜனாதிபதி, எமது நாட்டின் முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்ப்பதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

1979 ஆம் ஆண்டில் ஜப்பான் வர்த்தக சபையை பிரதிநிதித்துவம் செய்த தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் தற்போது 39 வருடங்களுக்குப் பின்னரே இத்தகைய பாரியளவிலான தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் குழுவிற்கு தலைமை வகிக்கும் கலாநிதி அக்கியோ மிமுரா (Akio Mimura) இலங்கையில் சேவைகள் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள தமது அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய கோவையொன்றையும் அவர் இதன்போது ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் கங்காநாத் திசாநாயக்க, இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# பசிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கித்சிரி ரணவக்க கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜீ ஐ குழாய்களை கொள்வனவு செய்து அரசாங்கத்திற்கு நட்டத்தினை ஏற்படுத்தினர் என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜீ ஐ குழாய்களை கொள்வனவு செய்து அரசாங்கத்திற்கு 36.5 மில்லின் ரூபா நட்டத்தினை ஏற்படுத்தினர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

## 6 பவுண் சங்கிலியை தவறவிட்டவரிடம் ஒப்படைத்து முன்மாதிரியாக செயற்பட்ட வர்த்தகர்



(கரணவாய்)

புடைவைவிற்பனைநிலையத்தில் தவறவிடப்பட்ட 6 பவுண் பதக்கச் சங்கிலியை உரியவரிடம் ஒப்படைத்து முன் மாதிரியாகச் செயற்பட்டார் வர்த்தகர் ஒருவர்.

முருகன் கோவிலடி, புலோலி வடமேற்கைச் சேர்ந்த மார்க்கண்டு ரூபரஞ்சிதன் என்பவர் சாவகச்சேரி வீதி மந்திகையில் யஸ்மி என்னும் புடைவை விற்பனை நிலையத்தை நடத்தி வருகிறார்.

சில தினங்களுக்கு முன்னர் அவரது புடைவை நிலையத்தில் ஆறு பவுண் நிறையுடைய பதக்கச் சங்கிலி ஒன்று தவற விடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனையடுத்து வர்த்தக நிலையத்திற்கு வந்தவர்களை விசாரித்த போது அது பூசகர் ஒருவருடையது என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை உரியவரிடம் ஒப்படைத்தார். (இ-60)

# ஆர்ப்பாட்டங்களை கலைப்பதற்கு பொலிஸாருக்கு விசேட அதிகாரம்

## ஊடகப் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகள் நிறைவடையும்வரை பேரணி மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கு, நீதிமன்ற உத்தரவிற்கமைய தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவினை மீறி பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டால் அதனை கலைப்பதற்கு பொலிஸாருக்கு விசேட அதிகாரம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமையவே பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு நீதிமன்றம் தடையுத்தரவினை பிறப்பித்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அரசியல் கட்சி காரியாலயங்களை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இவ்வாறு பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றும் பணிகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த செலவீனங்களுக்காக 230 மில்லியன் ரூபா தேர்தல் ஆணைக் குழுவினால் பொலிஸ் துறைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அதிபர் மண்டியிட்ட விவகாரம்

## ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

பதுளை பாடசாலை ஒன்றின் பெண் அதிபரொருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் [illegible] கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பன்வல பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்படுவதாக ஊவா மாகாண ஆளுநர் எம்.பி. ஜயசிங்க அறிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்[illegible] ஆளுநரின் பணிப்பின் பேரில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரை முதலமைச்சர் அச்சுறுத்தும் வேளையில் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட நபர்கள் இருந்ததாகவும் முதலமைச்சர் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றுமாறு அவர்கள் அதிபரை வற்புறுத்தியதாகவும் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இதேவேளை ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர், பதுளை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் தொடர்பிலும் மாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் நிறைவடையும் வரை அவர்களும் பதவிகளிலிருந்து நீக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் மெய்யான சவால்களை அடையாளம் காணத் தவறியுள்ளது

## கோத்தபாய சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மைத்திரி- ரணில் அரசாங்கம் மெய்யான சவால்களை அடையாளம் காணத் தவறியுள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் நாடு எதிர்நோக்கி வரும் மெய்யான சவால்களை புறந்தள்ளி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே அரசாங்கம் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை முடக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)



## இலங்கை-இந்தோனேஷியா இடையே மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையில் மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

மருத்துவ உபகரண உற்பத்தி, ரயில்வே துறையின் அபிவிருத்தி, கல்வித்துறையின் மேம்பாடு போன்றவற்றில் இலங்கைக்கு உதவும் வகையில், உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கை வந்துள்ள இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று இந்தோனேஷிய ஜனாதிபதி நேற்று முன்தினம் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் பிரதானமாக மூன்று விடயங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையிலான தனிநபர் மற்றும் நிறுவன ஆற்றல்களை மேம்படுத்தும் வழிவகைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

கடந்த ஆண்டு இலங்கை அரிசி தட்டுப்பாட்டை எதிர்கொண்ட போது இந்தோனேஷிய அரசாங்கம் 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை வழங்கியமை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்தார். (இ-7)

## விபத்தில் இருவர் படுகாயம்

(கரணவாய்)

நடந்து சென்ற பெண்ணை மோதிய மோட்டார் சைக்கிள் பின்னர் வேறொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து குள்ளானதில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். நெல்லியடி சந்தைக்கு அருகாமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை (24.01. 2018) நண்பகல் நடைபெற்ற விபத்தில் நடந்து சென்ற புலோலியைச் சேர்ந்த சண்முகம் சரஸ்வதி (வயது -55) மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற புலோலி மத்தியைச் சேர்ந்த கணேசன் பாஸ்கரன் (வயது-23) ஆகியோர் படுகாயங்களிற்குள்ளாகினர்.

இதில் காயமடைந்த பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)

## தொழிற்பயிற்சி செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்வி அலுவலுகமும், வடமாகாண கல்வித் திணைக்களத்தின் முறைசாராக்கல்வி பிரிவும் tec vision international training college(pvt) ltd நிறுவனமும் இணைந்து நடத்தும் வருமானம் தரும் முறை சாராக்கல்வி தொழிற்பயிற்சி தொடர்பான செயற்றிட்டம் இன்று பிற்பகல் 2 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் இடம் பெறும்.

இதில் பாடசாலையை விட்டு விலகியோர், தொழில் வாய்ப்பை எதிர் பார்க்கும் இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளலாம் என முறைசாரா கல்விப்பிரிவு அறிவித்துள்ளது. (இ-8)

## தேசிய ஆக்கத்திறன் போட்டிக்கான விருது

(கொழும்பு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் போட்டிக்கான விருது வழங்கும் விழா நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் இடம்பெறும். (இ-10)

## தேர்தல் நாளன்று முப்படைகளும் ரோந்து! தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் நாளன்று பாதுகாப்புக்காக முப்படைகளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுடன், தேர்தல் ஆணைக்குழு நேற்று முன் தினம் நடத்திய பேச்சுக்களின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களில் இருந்து 400 மீற்றருக்கு அப்பால் முப்படைகளையும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்குள் கையடக்க தொலைபேசிகள் பயன்படுத்துவது, மற்றும் வாக்குச்சீட்டுகளை படம்பிடிப்பது சட்டவிரோதமானது.

அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அஞ்சல் வாக்குகள், எதிர் வரும் பெப்ரவரி 9 ஆம் திகதி சிரேஷ்ட அஞ்சல் அதிபர்களிடம் கையளிக்கப்படும்.

எனினும், 10ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஏனைய வாக்குகளுடன் சேர்த்தே அவையும் எண்ணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஊவா மாகாண சபையில் பதற்றம்

## பொலிஸார் குவிப்பு; தாக்கப்பட்ட உறுப்பினர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

ஊவா மாகாண சபையில் பெரும் பதற்றம் நிலவியதால் அங்கு கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்

ஊவா மாகாண சபை அமர்வு நேற்று இடம் பெறவிருந்த நிலையில், கட்சிதாவிய மாகாணசபை உறுப்பினரான கணேசமூர்த்தி மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஆர்.எம். ரத்நாயக்கவின் வாகனத்தில் ஏறி சபைக்கு வந்துள்ளார்.

இந்நிலையில் மாகாண சபையின் புதிய கல்வி அமைச்சராக பதவியேற்றுள்ள செந்தில் தொண்டமானை கௌரவிக்கும் முகமாக ஊவா மாகாண சபையில் பொதுமக்கள் கூடியிருந்தனர்.

ஊவா மாகாண சபைக்குள் கட்சிதாவிய கணேசமூர்த்தி உள்நுழைகையில் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு நின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினரான உபாலி சேனாரட்ன மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் அம்புலன்ஸ் மூலம் பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சம்பவத்தையடுத்து ஊவா மாகாண சபை வளாகத்தில் கலக மடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சபை அமர்வு ஆரம்பமானதும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரொருவர் தாம் சபைக்கு வருவதற்கு பாதுகாப்பு இல்லையெனவும் இராணுவத்தினருடன் தான் சபைக்கு வரவேண்டுமெனவும் தெரிவித்தார்.



அதையடுத்து புதிதாக மாகாணக் கல்வி அமைச்சராக பொறுப்பேற்றுள்ள செந்தில் தொண்டமானும் தமக்கு சபைக்கு வருவதற்கு பாதுகாப்பு வழங்குமாறும் சபையில் தெரிவித்தார்.

இந்நிலையில் அவ்விடத்திற்கு வந்த முதலமைச்சர் இது தொடர்பில் தான் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்து அங்கிருந்து வெளியேறினார். சம்பவம் நடந்ததை கேள்வியுற்று அப்பகுதிக்கு விரைந்த அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் ஊவாமாகாண சபையில் கூடியிருந்த பொதுமக்களுடன் சந்திப்பில் ஈடுபட்டனர்.

தாக்குதல் நடத்தியோர் அங்கிருந்து தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பாசக்கார தோழிகள்!

வகுப்பறை முழுவதும் ஒரே சந்தோஷம். மாணவிகள் எல்லோர் முகத்திலும் சிரிப்பு. பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியகளைப்பே யாரிடமும் தெரியவில்லை. அந்தப் பள்ளி, பத்தாம் வகுப்பு வரை தான் இருந்தது.

பதினொன்றாம் வகுப்பு படிக்க வேறு பள்ளிகளுக்குத்தான் போக வேண்டும். யார் எங்கு போவார்கள் என்று உறுதியாகத் தெரியாது. பள்ளித் தோழிகள் இனி மேல் சந்திக்க வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகம் தான்.

அதனால் வகுப்பாசிரியைக்கு ஒரு யோசனை. மாணவிகள் எல்லோரையும் ஒரு மாலை வேளையில் கூப்பிட்டிருந்தார். சிற்றுண்டியும் தேநீரும் கொடுக்க முடிவு செய்தார்.

வகுப்பாசிரியை யோசனையின்படி எல்லா மாணவிகளும் வந்தார்கள். மாணவிகள் எல்லோரும் தாங்கள் கேட்ட, படித்த, பார்த்த விடயங்களை உற்சாகமாகப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால், பிரியாவும் செல்வியும் சோகமாக உட்கார்ந்திருந்தார்கள். உம்மென்று முகத்தை வைத்திருந்தார்கள். இருவரையும் கவனித்த ஆசிரியை அவர்கள் அருகில் சென்றார்.

"நீங்க ரெண்டு பேரும் ஏன் சோகமா இருக்கீங்க? நிகழ்ச்சியில பங்கெடுத்துக்குங்க!" என்றார்.

இருவரின் கண்களும் கலங்கியிருந்தன.

"ஏன் கண் கலங்குறீங்க?" என்று ஆசிரியை கூறியதும், அழ ஆரம்பித்தார்கள்.



"மிஸ்! இவங்க இதுவரைக்கும் பிரிஞ்சதே இல்லை. பதினொனாம் வகுப்பு படிக்க வேற ஸ்கூலுக்குத்தான் போகணும். ரெண்டு பேரும் வேறவேற ஸ்கூலுல சேர்ந்தா என்ன பண்றதுன்னு நினைச்சு சோகமா இருக்காங்க" என்றாள் பக்கத்தில் அமர்ந்திருந்தவள்.

"உங்க நட்பைப் பாராட்டுறேன். இரண்டு பேரும் ஒரே ஸ்கூலுல சேர்றதுக்கு வாழ்த்துகள்!" என்று வாழ்த்தினார் ஆசிரியை. அதன் பிறகும் கலகலப்பான நிகழ்ச்சியில் அவர்களால் பங்குகொள்ள முடியவில்லை.

சில நாட்கள் கழித்துத் தேர்வு முடிவுகள் வந்தன. பிரியா, சான்றிதழ் வாங்கத்தன் அப்பாவுடன் பாடசாலைக்கு வந்திருந்தாள். நானூற்றுஅறுபது மதிப்பெண் பெற்றிருந் தாள் பிரியா. செல்வியும் நானூற்றுஐம்பது மதிப்பெண் பெற்றிருந்தாள்.

சான்றிதழ் வாங்கிவிட்டுச் செல்வியைத் தேடினாள். தோழிகளிடம் விசாரித்தாள்.

"செல்வி இன்னும் வரலை" என்றார்கள் தோழிகள். அப்பாவை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுச் செல்வியைப் பார்ப்பதற்காகப் பாடசாலை நுழைவாயில் அருகே சென்றாள் பிரியா.

அப்போதுதான் செல்வியும், செல்வியின் அம்மாவும் பள்ளியின் உள்ளே நுழைந்தார்கள். செல்வியைப் பார்த்ததும் மகிழ்ச்சியில் பிரியா ஓடினாள். ஆனால், செல்வியின் முகம் வாடியிருந்தது. சோகமாக இருந்தாள்.

"ஏண்டி! சோகமா இருக்க? உடம்பு சரியில்லையா?" என்ற பிரியா, செல்வியின் கைகளை அன்புடன் பிடித்துக்கொண்டாள். செல்வியால் பேச முடியவில்லை. கண்களில் நீர் வழிந்தது.

"ஏண்டி அழுற?" அதிர்ச்சியுடன் கேட்டாள் பிரியா.

கண்களைத் துடைத்துக்கொண்ட செல்வி சிரமத்துடன் சிரித்துக் கொண்டு, "சர்டிபிகேட்டும் டிசியும் வாங்கிட்டியா?" என்று கேட்டாள்.

"ம்! வாங்கிட்டேன்!"

"எந்த ஸ்கூல்ல சேரப் போற?"

நகருக்குள்ளே உள்ள ஒரு பாடசாலையின் பெயரைச் சொன்னாள் பிரியா. "நீயும் வாடி, அந்த ஸ்கூலி லேயே சேர்ந்துரு" என்றாள்.

அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டே, "நான் வேலைக்குப்

தொடரும்...

## 01.2018 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1340-இங்கிலாந்து மன்னன் மூன்றாம் எட்வர்ட் பிரான்சின் மன்னனாக அறிவிக்கப்பட்டான்.
- 1500-விசெண்ட் யானெஸ் பின்சோன் பிரேசில் நாட்டில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்ர்.
- 1788-ஆர்தர் பிலிப் தலைமையில் பிரித்தானியக் கைதிகளின் முதலாவது தொகுதியைக் கொண்ட கப்பல் சிட்னியை அடைந்து புதிய குடியேற்றத்தை ஆரம்பித்தனர். இது ஆஸ்திரேலிய நாளாகக் கொண்டாடப்படுகின்றது.
- 1924- சென் பீட்டர்ஸ்பேர்க் லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1926-ஜோன் லோகி பெயர்ட் தொலைக்காட்சிப் பெட்டியைக் காட்சிப்படுத்தினார்.
- 1949- அவுஸ்திரேலியக் குடியுரிமை முதன் முறையாக வழங்கப்பட்டது.
- 1950- இந்தியா குடியரசு நாடானது. ராஜேந்திர பிரசாத் அதன் முதலாவது குடியரசுத் தலைவரானார்.
- 1958- ஜப்பானிய பயணிகள் கப்பல் தெற்கு அவாஜி தீவில் மூழ்கியதில் 167 பேர் கொல்லப்பட்டனர்.
- 1962- ரேஞ்சர் 3 விண்கலம் சந்திரனை ஆராய்வதற்காக விண்ணுக்கு ஏவப்பட்டது. ஆனாலும் இத் தளவுளவி 22,000 மைல்களால் சந்திரனைத் தவறவிட்டது.
- 1965- இந்தி இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியானது.
- 1980- இஸ்ரேலும் எகிப்தும் தூதரக உறவை ஆரம்பித்தன.
- 1983- லோட்டஸ் 1-2-3 வெளியிடப்பட்டது.
- 1992- ரஷ்யாவின் அணுவாயுத ஏவுகணைகள் ஐக்கிய அமெரிக்க நகரங்களை நோக்கி செலுத்தப் படமாட்டா என அதிபர் பொரிஸ் யெல்ட்சின் அறிவித்தார்.
- 2001- குஜராத் நிலநடுக்கத்தில் 20,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 2006-வெஸ்டர்ன் யூனியன் நிறுவனம் தொலைத்தந்தி மூலமான தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.

**பிறப்புகள்**

- 1667- என்றிக் சுவார்டெக்குரூன், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் ஆளுநர், யாழ்ப்பாணம் கட்டளை அதிகாரி (இ. 1728)
- 1763- காருல் யோவான், சுவீடன் நோர்வே அரசர் (இ. 1844)
- 1880- டக்ளசு மக்கார்த்தர், அமெரிக்க இராணுவத் தளபதி (இ. 1964)
- 1917- சி.டி.ராஜகாந்தம், தமிழக நாடக, திரைப்பட நகைச்சுவை நடிகை (இ. 1999)
- 1921- சித்திரசேன, இலங்கை நடனக் கலைஞர் (இ. 2005)
- 1921- அக்கியோ மொறிட்டா, சப்பானியத் தொழிலதிபர், சோனி நிறுவனர் (இ. 1999)
- 1924- மணியம், தமிழக ஓவியர் (இ. 1968)
- 1937- வீரபாண்டி எஸ். ஆறுமுகம், தமிழக அரசியல்வாதி (இ. 2012)
- 1956- பாரத லக்சுமன் பிரேமச்சந்திர, இலங்கை அரசியல்வாதி (இ. 2011)
- 1958- எல்லேன் டிஜெனிரெஸ், அமெரிக்க நடிகை
- 1966-அனிதா நாயர், ஆங்கிலப் புதின எழுத்தாளர், கவிஞர்
- 1968- ரவி தேஜா, இந்திய நடிகர்

**இறப்புகள்**

- 1823- எட்வர்ட் ஜென்னர், ஆங்கிலேய மருத்துவர், கண்டுபிடிப்பாளர் (பி. 1749)
- 1891- நிக்கோலஸ் ஓட்டோ, செருமானியப் பொறியியலாளர், உள் எரி பொறியைக் கண்டுபிடித்தவர் (பி. 1833)
- 1895-ஆர்தர் கெய்லி, ஆங்கிலேயக் கணிதவியலாளர் (பி. 1825)
- 1946- அதிரியான் வான் மானன், இடச்சு-அமெரிக்க வானியலாளர் (பி. 1884)
- 1954- எம். என். ராய், இந்திய விடுதலைப் போராட்ட வீரர், புரட்சியாளர் (பி. 1887)
- 1963-நீடாமங்கலம் என். டி. எம். சண்முக வடிவேல், தமிழகத் தவில் கலைஞர் (பி. 1929)
- 1964- ப. அ. தோமசு, யாழ்ப்பாணம் தோலகட்டி சுவாமிகள், இறை ஊழியர் (பி. 1886)
- 1990- லூயிசு மம்ஃபோர்டு, அமெரிக்க சமூகவியலாளர், வரலாற்றாளர் (பி. 1895)
- 2008- ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீனத் தலைவர் (பி. 1926)
- 2010- ஜியோப்ரி உரொனால்டு பர்பிட்ஜ், ஆங்கிலேய வானியலாளர் (பி. 1925)

**சிறப்பு நாள்**

- குடியரசு நாள் (இந்தியா)
- குடியரசு நாள் (ஆவுஸ்திரேலியா)
- விடுதலை நாள் (உகாண்டா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 |
| தக்காளி | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 50 |
| கரட் | 50 | 100 | 120 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 |
| பாகற்காய் | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 220 | 120 | 120 |
| லீக்ஸ் | 180 | 200 | 240 |
| பீற்றூட் | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 120 | 800 |
| போஞ்சி | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 75 |
| இராசவள்ளி | 180 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 150 | 200 |
| முள்ளங்கி | 30 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு நண்பனாம் யூதாசு நன்றியை மறந்து காட்டிக் கொடுத்தானே
முப்பது காசுக்காகவே காட்டிக் கொடுத்தானே.
- கிருஷ்ணராஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சம்பந்தா உனக்குப் பால் தந்தது யார்? சம்பந்தா 2 கோடி ரூபாயை வழங்கியது யார்?

அன்று சீர்காழியில் நடந்த சம்பவம் இது. சிவபாதவிருதையர் சம்பந்தக் குழந்தையை கேணிக்கட்டில் இருத்திவிட்டு நீராடச் செல்கிறார்.

தந்தையைக் காணாத குழந்தை அம்மையே அப்பா என்று அழுகிறது. குழந்தையின் அழு குரல் கேட்டு அம்மையும் அப்பனும் எருதேறி வருகின்றனர்.

தமிழினம் வாழ, தமிழ் வாழ, சைவம் தழைத்தோங்க பார்வதி அம்மையார் சம்பந்தக் குழந்தைக்கு ஞானப் பால் கொடுக்கிறார்.

சம்பவம் நடந்து முடிந்த கையோடு சிவபாத விருதையர் கரையேறி வருகிறார். சம்பந்தக் குழந்தையின் கடைவாயில் பால் வழிந்திருக்கிறது.

அந்தோ! அபத்தம் அபத்தம். வேதம் ஓதும் வேதியர்களாகிய யாம் பிறரிடம் அன்னம் ஆகாரம் அருந்தக் கூடாதன்றோ! என் குழந்தைக்கு யாரோ பால் கொடுத்துள்ளனர்.

அபச்சாரம் அபச்சாரம் என்று குழம்பிய சிவ பாதவிருதையர் கோபம் கொண்டு குழந்தையை அதட்டுகிறார். சம்பந்தா உனக்குப் பால் தந்தது யார் சொல்? பால் தந்தது யார் சொல்? தந்தையின் அதட்டலுக்குப் பதலளிக்கிறது குழந்தை.

வானத்தை நோக்கி *தோடுடைய செவியன் விடை ஏறியோர்...* என்று பாடல் வரிகளால் தனக்குப் பால் தந்த பார்வதி பரமேஸ்வரனை அடையாளப்படுத்துகிறது.

அம்மையும் அப்பனும் எருதேறி வந்து தன் குழந்தைக்கு ஞானப்பால் கொடுத்தருளியதை உணர்ந்த சிவபாதவிருதயர் தோணிபுரத்து அம்மை அப்பனை வீழ்ந்து வணங்குகிறார். இது அன்று நடந்த கதை.

இன்று இங்கு நடப்பது என்ன? இதோ கதை ஆரம்பமாகிறது.

சம்பந்தர் தலைமையிலான சிலரை தமிழ் மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்புகின்றனர்.

அவர்கள் அனைத்தையும் பார்ப்பார்கள், எங்கள் பொறுப்பு முடிந்து விட்டது என்ற நினைப்பில் தமிழ் மக்கள் தங்கள் பாட்டைப் பார்க்கின்றனர். மீண்டும் தேர்தல் பேரிகை முழங்குகிறது. மக்கள் விழித்து எழுகின்றனர்.

அதோ பாராளுமன்றத்துக்குச் சென்றவர்களில் சிலர் இரண்டு கோடி ரூபாயை வாங்கியுள்ளதாகத் தகவல்கள் வருகின்றன.

இஃதென்ன கொடுமை, எங்கள் பிள்ளைகளைப் போரில் பலிகொடுத்துவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக நாங்கள் அலைகின்றோம்; காணாமல்போன எங்கள் உறவுகளைத் தேடி ஊண் உறக்கம் மறந்து வாழுகிறோம்;

சிறைகளில் வாடும் எங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக ஏங்கி ஏங்கி விழித்திருக்கிறோம்.

ஆனால் இங்கு எங்கள் பிரதிநிதிகள் என்றிருப்போரில் சிலர் அரசாங்கத்திடமிருந்து இரண்டு கோடி ரூபாய் இலஞ்சமாக வாங்கியுள்ளதாகக் கூறுகின்றார்கள்.

எங்கே? சம்பந்தர் ஐயாவே சொல்லுங்கள், நீங்கள் இரண்டு கோடி ரூபாய் வாங்கினீர்களா? உங்களுக்கு இரண்டு கோடி ரூபாயைத் தந்தது யார்? ஏன் தந்தார்கள்? சொல்லுங்கள் சொல்லுங்கள். அதை என்ன செய்தீர்கள் சொல்லுங்கள்?

அட, தோடுடைய செவியன் பாடல் போல் எதையும் சம்பந்தர் பாடவில்லை. ஆனால் எல்லாம் அபிவிருத்திக்கே என்ற அசரீரி கேட்கிறது.

என் செய்வோம். அன்று ஞானப்பால்; இன்று இரண்டு கோடி ரூபாய். அவ்வளவுதான்.

### கடற்றொழில் சங்கத்தின் அனுமதியின்றி

# சிங்கள மீனவர்களுக்கு கரைவலைப்பாடுகளை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் தமிழ் மக்களுடைய காணிகள் சிங்களவர்கள் வசம் சென்று கொண்டிருக்கும் நிலையில், கரைவலைபாடுகளையும் முல்லைத்தீவுகடற்றொழில் சங்கங்களின் அனுமதி இன்றி தன்னிச்சையாக சிங்களவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மகாவலி எல் (L) வலய திட்டத்திற்குள், உள்ளடக்கப்பட்டுள்ள கொக்குளாய், கொக்குதொடுவாய், கருநாட்டுகேணி, நாயாறு ஆகிய இடங்களில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு மேலும் 15 சிங்கள மீனவர்களுக்கு கரை வலைப்பாடுகளை வழங்க சிபார்சு செய்யுமாறு மகாவலி எல் (L) வலய திட்ட முகாமையாளர், மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கரைவலைப்பாடுகளுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரம் தற்போது வழங்கப்படவுள்ள நிலையிலேயே, 15 சிங்களவர்களுக்கு கரை வலைப்பாடுகளுக்கான அனுமதி பத்திரம் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவில் ஏற்கெனவே பெருமளவில் சிங்களவர்களுக்கு கரைவலைபாடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் சிங்களவர்களுக்கு வழங்கப்படுவது குறித்து முல்லைத்தீவு கடற்றொழிலார்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் கடற்றொழிலாளர்களுக்கே கரைவலைப்பாடுகள் இல்லாத நிலையில், இவ்வாறு சிங்களவர்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதேவேளை, இதன்மூலமும் மகாவலியின் கரையோர நிலங்களை ஆக்கிரமிப்பதுதான் இவர்களின் தூர நோக்கு என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றைய வடக்கு மாகாண சபையின் அமர்வில் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-4)

# 8 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த இரண்டு விசை படகுகளையும் எட்டு மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் காங்கேசன துறை கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

இந்நிலையில் விசாரணைக்கு பின்னர் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (ம)

# வாக்குச் சீட்டுகளை படம் பிடிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்குள் அலைபேசிகளைப் பயன்படுத்துதல், வாக்குச்சீட்டுகளைப் புகைப்படம் எடுத்தல் என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அலைபேசிகளைப் பயன்படுத்தி அல்லது புகைப்படக் கருவிகள் மூலம் வாக்குச் சீட்டுக்களைப் புகைப்படம் எடுத்தல், சட்டவிரோதச் செயற்பாடெனக் கருதி கைது செய்யப்படுவர் எனவும் அவர தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனி காலை 08.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் கௌதாரி முனைப பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில் நெடுங்குளம் கிராமம், கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரிய கூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வெள்ளாங்குளம், கணேசபுரம், தேவன்பிட்டி நீர்ப்பாசன சபை, கணேச புரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஞானம் தேடுபவரின் ஆறு அடையாளங்கள்

**1. ஒருவன் தான் மிகச் சிறிதளவே அறிந்தவன் என்ற உண்மையை ஒப்புக் கொள்ளுதல்**

பலர் எதையும் அறியாமலே தாங்கள் எல்லாமே அறநதவா என நினைககிறாாகள. தஙகளுககுளள ஒரு எல்லைக்குட்பட்ட அறிவிலேயே வளர்ச்சியடையாது நின்று விடுகிறார்கள். ஆகையால் அவர்கள் என்றுமே தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள கற்பதில்லை. ஆதலால் முதலில் ஒருவன் தான் மிகச் சிறிதளவே அறிந்தவன் எனும் உண்மையை ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

**2.அறிந்து கொள்ளும் விருப்பம்**

பலா தாஙகள எலலாமே அறநதவா அலலா எனபதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் கற்பதற்குத் தயாராக இருப்பதில்லை.

**3.எதையும் எடைபோடாது ஏற்கும் திறந்த மனம் பெற்றிருத்தல்**

சிலா கறபதறகு விருமபுவாாகள. ஆனால எதையும எடைபோடும் மனநிலையும் குறுகிய மனப்பான்மையும் அவர்களைக் கற்பதற்கு விடுவதில்லை.

**4.ஒருவா தான தோநதெடுதத பாதையில முழு ஈடுபாடும் ஒருமுக நோக்கும் பெற்றிருத்தல்**

சிலர் எதையும் ஏற்கும் திறந்த மனம் பெற்றிருந்தாலும் முழு ஈடுபாடும் ஒருமுக நோக்கும் பெற்றிருப்பதில்லை. அவர்கள் வேறு பாதைகளிலும் மனதை அலைபாய விடுவதனால் என்றும் வளர்ச்சியடைவதில்லை.

**5.எபபொழுதும உலக இனபஙகளுககு மேலாக உண்மைக்கும் சேவைக்கும் முக்கியத்துவம் கொடுத்தல**

சில நேரங்களில் ஈடுபாடும் ஒருமுக நோக்கும் உள்ளவர்கள் கூட கண நேர உலக இன்பங்களை நாடித் தொடர்வதனால் தங்கள் பாதையிலிருந்து விலகி நிற்கிறார்கள்.

**6.பொறுமையும் விடாமுயற்சியும்**

சிலர் உலக இன்பங்களால் மனச்சலனம் அடைவதில்லை. அவர்கள் ஈடுபாடும் ஒருமுக நோக்கும் உடையவர்களாக இருந்தபோதிலும் அவர்களிடம் பொறுமையும் விடாமுயற்சியும் இல்லாதபோது அவர்கள் அமைதியிழந்து விரக்தியடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டில் எந்தத் திசையில் கிணறு தோண்ட வேண்டும்?

வடு காடடுவது முதல வடடில கதவு, சமையல அறை, ஜன்னல் போன்ற அனைத்தும் எந்த திசையில் அமைக்க வேண்டும் என்பதற்கு வாஸ்து சாஸ்திரத்தில் குறிப்புகள் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, நம் வீட்டில் எந்த திசையில் கிணறு அமைப்பது அதிர்ஷ்டமாக இருக்கும் என்பது பற்றி பாரககலாம.

**எந்த திசையில் கிணறு அமைக்க வேண்டும்?**

ஒரு வட்டு மனையின வடகிழகது திசையில கிணறு தோண்ட வேண்டும். அந்த திசையில் சௌகரியப் படாவிட்டால், வடக்கு திசையில் தோண்டலாம்.

கிணறு மடடுமலலாமல போர போடுதல, கழநிலை நீர்தேக்கத் தொட்டி ஆகியவற்றை அமைப்பதற்கும் இதே திசைகளை பயன்படுத்த வேண்டும்.

ஆனால் எக்காரணம் கொண்டும் தென்கிழக்கு திசையில் மட்டும் வீட்டு மனையின் மையப்பகுதி ஆகியவற்றில் கிணற்றை அமைக்கக் கூடாது.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### வீண் செலவு செய்யாதீர்

✦ உணவு வைக்கப்பட்டால் உங்களின் செருப்புகளை கழற்றிவிடுங்கள். அது உங்களின் பாதங்களுக்கு இன்பத்தை அளிக்கும்.

✦ நீங்கள் இரவில் பட்டினியாக இருக்காதீர்கள். பட்டினி இருப்பதால் விரைவில் உங்களுக்கு முதுமை தட்டிவிடும்.

✦ வீண் செலவும் ஆடம்பரமும் இல்லாத முறையில் உண்ணுங்கள். முடிந்தவரை தருமமும் செய்யுங்கள்.

✦ மக்களுக்கு தேவைப்படுகின்ற நேரத்தில் உணவை பதுக்கி வைப்பவர்கள் குஷ்டரோகியாகவும் வறுமைப பிடியிலும் துன்பப்படுவார்கள்.

✦ பழிததுரைததல, ஒழுககம கெடட முரடடுததனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும.

✦ உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு.

✦ இறைவனை நீ பார்க்காவிட்டாலும் உன்னை அவன் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.

✦ ஏழைகளின் பிரார்த்தனை இல்லை என்றால், செல்வந்தர்கள் அழிந்தே போவார்கள்.- நபிகள் நாயகம்

# சென்.பற்றிக்ஸ் வெற்றிவேட்டை

## கிண்ணியாவை வீழ்த்தி அரையிறுதியில்





(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 18 வயதுக் குட்பட்டவர்களுக்கான கால்பந்தாட்ட அணியின், அபார ஆட்டம் தொடர்ந்து வெளிப்பட்டு வரும் நிலையில், கிண்ணியா அணியுடனான பிரிவு -1 காலிறுதியையும் வென்று அசத்தியுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், 18 வயது, பிரிவு - 1 அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதியாட்டம் ஒன்று கடந்த புதன்கிழமை இராஜகிரிய மொறகஸ்முல்ல மைதானத்தில் நடைபெற்றது.

காலிறுதியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிண்ணியா மத்திய கல்லூரி அணி மோதியது. போட்டியில் முதல் கோலினை சென்.பற்றிக்ஸ் அணி போட்டது. அந்தக் கோலை கிறிஸ்ரீபன் ஜேசுதாஸன் அடித்தார்.

பதிலுக்கு கிண்ணியா மத்திய கல்லூரி அணியும் போட்டது.

இருந்தும் அதற்கான பதில் கோலை சென்.பற்றிக்ஸ் அணியின் கெய்ன்ஸ் ஹமில்டன் போட்டார். முதற்பாதியாட்டத்தில் பற்றிக்ஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிக கோல்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. முடிவில் சென்.பற்றிக்ஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வென்று, அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (க-26)

# தப்பிப் பிழைத்த விராட் ஹோலி கத்தித் தொலைத்த பிலண்டர்


தென்னாபிரிக்க அணியுடனான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 187 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற ஆடுகளம் என்பதால் இந்திய அணி திணறியது. விராட் ஹோலி 11 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, ரபாடா வீசிய பந்தை தூக்கி அடிக்க, அது உயரத்தில் பறந்தது. அந்த எளிய பிடியை பிலண்டர் நழுவ விட்டுவிட்டார்.

கடுப்பான ரபாடா மைதானத்தில் குத்த வைத்து கத்தித் தீர்த்துவிட்டார். அந்த பிடியை பிடித்திருந்தால் இந்திய அணி இன்னும் குறைவான ஓட்டங்களுக்குள் சுருண்டிருக்கும்.

அதேபோல, ஹோலி 32 ஓட்டங்களில் ஆடிக்கொண்டிருந்த போது, வழங்கிய பிடியை, ஸ்லிப்பில் நின்ற டிவில்லியர்ஸ் தவற விட்டார். மறுபடியும் தப்பிய அவர், ஸ்கோர் 97 ஓட்டங்களை எட்டிய போது, நிகிடி வீசிய பந்தை பவுண்டரிக்கு விரட்ட முயன்றார்.

ஆனால் பந்து துடுப்பாட்ட மட்டையின் விளிம்பில் பட்டு ஸ்லிப்பில் நின்ற டிவில்லியர்சிடம் சென்றது. இந்த முறை அந்த கட்சை சரியாக பிடித்தார் வில்லியர்ஸ்.




இந்திய அணியில் தொடக்க வீரர்களான ராகுல் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும், முரளி விஜய் 8 ஓட்டங்களுடனும் விக்கெட்டை இழந்தனர்.

புஜாரா 50 ஓட்டங்களிலும், தலைவர் ஹோலி 54 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

ஹானே 9 ஓட்டங்ளிலும், பார்த்திவ் படேல் 2 ஓட்டங்களிலும் விக்கெட்டை பறிகொடுத்தனர்.

ஹர்திக் பாண்ட்யா ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

புவனேஷ்வர் குமார் 30 ஓட்டங்கள் எடுத்தார். (க)

## மைதானம் மோசம்; புஜாரா தெரிவிப்பு

ஜோகன்ஸ்பெர்க் மைதானத்தில் 187 ஓட்டங்களே நல்ல Score தான் என இந்திய துடுப்பாட்ட வீரர் புஜாரா தெரிவித்துள்ளார்.

இந்திய அணி ஜோகன்ஸ்பெர்க்கில் நடந்த கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் 77 ஓவர்களில் 187 ஓட்டங்களுக்கு சுருண்டது.


அந்த அணியில் தலைவர் ஹோலி 54 ஓட்டமும், புஜாரா 50 ஓட்டமும், புவனேஷ்வர் குமார் 30 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்நிலையில் இந்திய வீரர் புஜாரா ஆட்டம் தொடர்பாக கூறுகையில்,

'ஜோகன்ஸ்பெர்க் ஆடுகளத்தில் துடுப்பாட்டம் செய்தது, கேப்டவுன் ஆடுகளத்தை விட மிகவும் சவாலாக இருந்தது. நான் விளையாடிய ஆடுகளங்களில். இந்த Pitch மிகவும் கடினமான ஒன்று. இதனால் இந்த ஆடுகளத்தில் 187 ஓட்டங்கள் என்பது நல்ல Score தான். இந்த ஆடுகளத்தில் விக்கெட்டை காப்பாற்றி கொள்வது மிகவும் கடினம்.

சாதாரண மைதானத்தில் 300 ஓட்டங்கள் எடுப்பதற்கு, இந்த 187 ஓட்டம் சமமாகும். மொத்தத்தில் நாங்கள் சிறப்பாகவே துடுப்பாட்டம் செய்து, போதுமான ஓட்டங்களை எடுத்துள்ளோம். (க)







யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 38ஆவது வீதியோட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

# குடும்பத்துடன் குதூகலமாய் குமார் சங்கக்காரா

இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் குமார் சங்கக்காரா தற்போது, இங்கிலாந்து சர்ரே அணிக்காக கவுண்டி போட்டிகளில் விளையாடி வருகிறார்.

தனது தொழிலான விளையாட்டுத்துறையில் எந்த அளவுக்கு சங்கக்காரா கவனம் செலுத்துகிறாரே, அந்த அளவுக்கு தனது குடும்பத்துடனும் நேரத்தினை செலவழிப்பதில் கவனம் செலுத்துவார்.



தனக்கு, நேரம் கிடைக்கும்போதெல்லாம் தனது மனைவி மற்றும் குடும்பத்தினருடன், சுற்றுலா செல்வதும், அதுதொடர்பான புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிடுவதும் வழக்கம்.

இவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன், Digana- வில் உள்ள ஆற்றில் நீச்சலடித்து தனது நேரத்தினை செலவிட்டுள்ளார்.

அது தொடர்பான புகைப்படத்தையும் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (க)

# நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

ஆண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பெண்களுக்கான கபடிப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

ஆண்களுக்கான கபடிப் போட்டி நாளை சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ் வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 2:00 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

ஆண், பெண்களுக்கான எல்லேப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை நடைபெற மாட்டாது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அதிபர்கள்...

றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது எதிர்க்கட்சி தலைவர், வடக்கு மாகாண முதலமைச்சர் அரச அதிபர் ஒருவருக்கு அனுப்பிய கடிதம் குறித்து கேள்வி எழுப்பிய போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மத்திய அரசு வழங்கும் பணிகளை மாத்திரம் செய்து கொண்டு, அவர்களுடைய நலன்களை பற்றியே அரச அதிபர்கள் சிந்திக்கின்றனர். மத்திய அரசின் நலன்களை மட்டுமே அரசாங்க அதிபர்கள் பார்ப்பதால்,

மாகாணங்களுக்கு பாதகமான நிலை ஏற்படுகின்றது. செயற்பாடுகள் தவறாக உள்ளன. எனவே அரச அதிபர்கள் இந்த விடயத்தில் எமது கருத்துக்களையும் உள்ளடக்கி தமது பணியை முன்னெடுக்க வேண்டும். தாம் மத்திய அரசின் பணியாளர்கள் என்ற நினைப்பில் இருக்காது மாகாணங்களின் நலன்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

மத்திய அரசால் கொண்டுவரப்படுகின்ற திட்டங்கள் தொடர்பில் எமக்கும் அறியத்தந்து, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை அரசாங்க அதிபருக்கு முதலமைச்சர் கட்டளையிட முடியாது எனவும், அரசியல் ரீதியாகவே இந்த விடயம் அணுகப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.(ம-4)

## சகல கட்சித் தலைவர்...

மத்திய வங்கி ஊழல் மற்றும் பாரிய இலஞ்ச ஊழல், மோசடி என்பவற்றை மேற்கொண்டு நாட்டின் அரச வளங்களையும் மக்களின் பணத்தையும் கொள்ளையிட்டவர்கள் யார் என மக்கள் நன்றாக அறிவார்கள் எனத் தெரிவித்த ஜனாதிபதி, ஒருபோதும் உண்மையை மக்களிடமிருந்து மறைத்துவைக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

மேலும் மத்திய வங்கி பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை மற்றும் பாரிய இலஞ்ச ஊழல் மோசடிகளைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்றத்தில் கூச்சலிட்டவர்கள் அந்த அறிக்கைகளைதான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தன் பின்னர் ஊழல்வாதிகளின் கூட்டமைப்பொன்றினை கட்டியெழுப்பி அவ்வறிக்கை பற்றிய விவாதத்தில் ஈடுபடுவதை தாமதித்து வருகின்றமையை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இந்த ஆணைக்குழு அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் தினம் இந்த ஊழல்வாதிகளின் கூட்டமைப்பு பொரளையிலுள்ள வீடொன்றில் சந்தித்து கட்சி, நிறம், இனம் மற்றும் மொழி பேதமின்றி தமது ஊழல் செயற்பாடுகளை மறைப்பதற்காக ஒன்றிணைந்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டால் பெரும்பாலானோரின் தவறுகள் நாட்டிற்கு வெளிச்சமாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி , எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறும் தேர்தலுக்கு முன்னர் முடியுமானால் ஒரே ஒரு தினமாவது அவ்வறிக்கை குறித்த விவாதத்தை மேற்கொள்ளுமாறு தான் அவர்களுக்கு அழைப்பு விடுப்பதாக தெரிவித்தார்.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக எதிரணியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி அதற்காக வாக்களிக்கவோ, அன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு வருகை தரவோ இல்லை எனவும் பாராளுமன்றத்திற்கு வெளியேயிருந்து ரவி கருணாநாயக்கவிற்கு வாழ்த்துக்கூறிய விதம் தொடர்பாக தான் அண்மையில் தெரிவித்தமைக்கு பதிலளிக்கும் வகையில் அத்தகையதொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள பிரசாரத்தை இதன்போது நினைவுகூர்ந்த ஜனாதிபதி அன்றைய தினத்திற்கான பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கையையும் முன்வைத்து அன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு வருகைதராத உறுப்பினர்களில் முன்னாள் ஜனாதிபதியின் பெயரும் அடங்கியுள்ளதாக தெரிவித்தார்.

மக்களை ஏமாற்றுவதற்கோ, திசை திருப்புவதற்கோ எந்தவொரு அரசியல் கட்சிக்கும் முடியாது என தெரிவித்ததுடன் சட்டத்தின் முன்னிலையில் சகலரும் சமமாக கருதப்படுவதுடன் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட சகலரும் குற்றவாளிகள் ஆக்கப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி இதன்போது கூறினார். (ம)

## பொதுமக்களின்...

படையினருக்கு சுவீகரிக்க மேற்கொள்ளப்படவிருந்த அளவீட்டு பணிகள் பொதுமக்களுடைய போராட்டத்தை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. J/50 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கடற்கரை வீதியில் அமைந்துள்ள குறித்த 20 பேர்ச் அளவு காணியை [2பரப்பு] சுவீகரிப்பதற்கு நேற்றைய தினம் அளவீட்டு பணிகள் நடைபெறும் என யாழ்.மாவட்ட நில அளவை திணைக்களத்தினரால் காணி உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று காலை குறித்த கடற்படை முகாம் முன்பாக ஒன்று கூடிய அப்பகுதியை சேர்ந்த மக்கள், காணி சுவீகரிப்புக்கு எதிராக போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்கள். இந்த போராட்டத்தை அடுத்து காணி அளவீட்டு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த காணியில் 20 வருடங்களுக்கு மேலாக கடற்படையினர் நிலை கொண்டுள்ள நிலையில், சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள குறித்த காணியை சூழ மேலும் இரு ஏக்கர் அளவு காணி உள்ளதாகவும், கடற்படை அங்கிருப்பதால் தம்மால் அங்கு மீள் குடியேற முடியாமல் இருப்பதாகவும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளன்ர்.

கடற்படையினரின் முகாம் அமைப்பதற்கென நிரந்தரமாக சுவீகரிக்கப்படவுள்ள தமது காணியை மீளவும் தங்களிடம் வழங்க கோரி காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.தமது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு குறித்த காணியை மீட்டுத்தருமாறு தனி நபர் ஒருவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் நேற்றைய தினம் அளவீட்டு பணிகள் நடைபெறவிருந்த நிலையிலேயே பொதுமக்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதில் ஜே/50 கிராம சேவகர் பிரிவில் உள்ள 2 பரப்பு காணி ஒன்றை கடற்படையினரின் முகாம் அமைப்பதற்கு நிரந்தரமாக சுவீகரிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் குறித்த காணியை அளவிடுவதற்கு நேற்று 25 ஆம் திகதி நில அளவையாளர்கள் வருகை தரவுள்ளதாக குறித்த காணியின் உரிமையாளருக்கு கடிதம் மூலம் யாழ்.மாவட்ட நில அளவை திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.இதனால் மனமுடைந்த குறித்த காணி உரிமையாளர் தான் தனது காணியை மீட்டுத்தருமாறு அனைத்து அதிகாரிகளிடத்திலும் முறையிட்டிருந்தேன்.

எனது கோரிக்கைகள் எதையும் செவிசாய்க்காமல் எனது காணியை சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகளை கடற்படையினர் மேற்கொண டுள்ளனர். எனவே இந்த காணி அளவீட்டை நிறுத்தி கடற்படையினரிடம் இருந்து எனது காணியை பெற்றுத்தர உதவுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த படைமுகாம் முன்பாக ஒன்று கூடிய குறித்த காணி உரிமையாளர் மற்றும் அதனை அண்டிய மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். எனினும் குறித்த போராட்டத்திற்கு கடற்படையினர் அச் சுறுத்தியதாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

## கடற்படையினர்...

டத்தில் ஈடுபட்டிருந்த காணி உரிமையாளர் ஒருவரை கடற்படையினர் அச்சுறுத்தியுள்ளனர். இந்த அச்சுறுத்தல் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடற்கரை வீதி, பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள இரண்டு பரப்பு காணியை சுவீகரிப்பதற்காக நேற்றைய தினம் காணி அளவீட்டு பணிகள் நடைபெறவுள்ளதாக,

மேற்படி காணியின் உரிமையாளருக்கு யாழ்.மாவட்ட நில அளவை திணைக்களத்தினரால் கடந்த 10ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. தனது காணி சுவீகரிப்புக்கு எதிராக போராடுவதற்கு ஆதரவு தருமாறு காணி உரிமையாளர் அயல்பகுதி மக்களிடம் ஆதரவு கோரியுள்ளார். இதனை அறிந்த கடற்படையின் புலனாய்வு பிரிவினர் கடந்த 23ஆம் திகதி பொதுமக்களை அழைத்து கூட்டம் கூட வேண்டாம் என மிரட்டியுள்ளனர்.

இதனை அடுத்து மறுநாள் 24 ஆம் திகதி காலை காணி உரிமையாளரை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட கடற்படை புலனாய்வு பிரிவினர், காலை 09 மணிக்கு மண்கும்பான் கடற்படை முகாமுக்கு வருமாறு அழைத்துள்ளனர். இதனால் அச்சமடைந்த காணி உரிமையாளர் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

எனினும் நேற்றைய தினமும் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட புலனாய்வு பிரிவினர் குறித்த போராட்டத்தை கைவிடுமாறு அச்சுறுத்தியுள்ளனர். அச்சுறுத்தலை மீறியும் போராட்டம் நடைபெற்ற போது போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வந்த புலனாய்வு பிரிவினர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வருகை தந்த வாகனங்களின் இலக்கத்தகடுகளின் எண்களை குறித்து சென்றுள்ளனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியை சேர்ந்த மக்கள் அச்சத்தில் உள்ளனர். (ம-4)

## கட்டார் மன்னர்...

கட்டார் மன்னர் சேக் தமின் பின் அகமட் அல் தானி மற்றும் அவரது குடும்பத்தினர் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டார் மன்னரின் அழைப்பை ஏற்று கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டாருக்கு விஜயம் மேற்கொண்டார். இது கட்டார் நாட்டுக்கு இலங்கையின் அரச தலைவர் ஒருவர் மேற்கொண்ட முதலாவது விஜயமாகும்.

ஜனாதிபதியின் கட்டார் விஜயத்தை அடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுவடைந்துள்ளதுடன் இருத்தரப்பு ஒத்துழைப்புகள் அதிகரித்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(ம)

## வீதி விபத்தில்...

ஒரு மாதத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை அராலி மத்தியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி யதீஷவரன் (வயது 30) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

மேற்குறித்த நபர் அவருடைய நண்பருடன் கடந்த டிசம்பர் மாதம் 24ஆம் திகதி சித்தன்கேணியில் மரணச்சடங்கு ஒன்றுக்கு சென்றுவிட்டு நண்பகல் 12 மணியளவில் அராலி நோக்கி மோட்டார் சைக்கிளில் அதி வேகமாக வந்துள்ளனர்.

கொட்டைக்காடு வைத்தியசாலைக்கு அண்மையில் இவர்கள் பயணித்த வீதி வளைவாகவும் குன்றும் குழியுமாக காணப்பட்டுள்ளது. அதி வேகமாக மோட்டார் சைக்கிளை அப்பகுதியில் செலுத்தி வந்த காரணத்தால் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே உள்ள தொலைபேசி இணைப்பு கம்பத்துடன் மோதியுள்ளது.

அப்போது மோட்டார் சைக்கிளின் பெற்றோல் ராங் வெடிந்து சிதறி தீப்பற்றியுள்ளது. மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவர் மீது தீப்பற்றி சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்ததுடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த மேற்குறித்த நபர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஒரு மாதமாக சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் நேற்று முன்தினம் 24ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டிருந்தார். (ம-09)

## முல்லைத்தீவு...

மகாவலி எல் [L] வலயத்தில் 6 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கி கிவுல் ஓயா எனும் பெயரில் சிங்களவர்களுக்கு என மிகப்பெரும் நீர்ப்பாசன திட்டத்தை மத்திய அரசு கொண்டுவருவதனை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன் அம்பலப்படுத்தியுள்ளார்.

குறித்த திட்டம் தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளிலேயே உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போது குறித்த திட்டம் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என பிரேரணை ஒன்றை கொண்டு வந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாழ் நிலங்கள், வயல் நிலங்கள் மற்றும் குளங்கள் என்பன அபகரிக்கப்பட்டே இந்த நீர்ப்பாசன திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் மிகவும் ஆபத்தானதாகும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மாத்திரமின்றி மேலும் ஒரு தொகுதி பெரும்பான்மை மக்களை முல்லைத்தீவில் குடியேற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது எனத் தெரிவித்தார். (ம-4)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு பிணை

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3ஆம் வருட சிங்கள மாணவர்கள் 13 பேரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றால் நேற்று வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 4ஆம் வருட சிங்கள மாணவர்கள் இருவருக்கு 3ஆம் வருட சிங்கள மாணவர்கள் கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை இரவு பல்கலைகழகத்துக்கு முன்பாக வைத்து தாக்குதல் நடத்தினர். சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான மாணவர்கள், கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார், தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் 4 சிங்கள மாணவர்களைக் கைது செய்தனர்.

அவர்கள் நான்கு பேரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் 3ஆம் வருட சிங்கள மாணவர்கள் 9 பேர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சரணடைந்தனர். அவர்கள் 9 பேரும் நீதிமன்றின் உத்தரவில் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

13 மாணவர்களும் நேற்று யாழ்ப்பாணம் நீதமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது 13 மாணவர்களையும் நிபந்தனையுடனான பிணையில் விடுவித்து நீதவான் உத்தரவிட்டார். (ம)

## ஜனாதிபதி-பிரதமர்...

என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பொது எதிரணி-தமிழ் தேசியக் கூட்டமைப்பு என அனைவரும் இணைந்து ஆட்சியினை முன்னெடுக்கும் பயணத்தில் ஒத்துழைப்பு வழங்கினாலும் ஆதரிக்கத்தயாராகவே உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்பது அனைவருக்குமே தெரியும். இதில் பிரதான இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதில் அனைவருக்கும் பங்களிப்பு உள்ளது. பொது எதிரணியா இருக்கலாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டினை சரியாக முன்னெடுத்து செல்ல முடியும். அதில் எந்த தடைகளும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாரிய நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சில் நேறறு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தேசிய அரசாங்கத்தின் நகர்வுகள் குறித்து கேள்வி எழுப்பிய போதே இதனைக் குறிப்பிட்டார். (ம)

## இனந்தெரியாதோர்...

ச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம். நேற்றுமுன்தினம் புதன் கிழமை அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரப் பகுதியில் இரவு 09 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த வி.குருபவராசா (வயது 39) என்பவரே தாக்குதலுக்கு உள்ளானவராவர்.

அவரிடமிருந்து ஒரு தொகை பணமும் கைத் தொலைபேசி ஒன்றும் அபகரிக்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
## Jaffna International Trade Fair

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

JITF 2018

26 27 28

இன்று ஆரம்பம்

ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna

MAIN SPONSOR S-lon

ORGANIZED BY LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH CCTY

www.jitf.lk
jitf.lk

ICT | FOOD & BEVERAGE | APPAREL | AUTOMOBILE | CONSTRUCTION | AGRICULTURE

OFFICIAL PARTNERS

MOBILE TELECOMMUNICATION Sri Lanka Telecom Mobitel
ROOFING ANTON
FOOD RUHUNU FOODS
PRINT MEDIA
CONSTRUCTION SOLUTION PROVIDER INSEE CEMENT
ELECTRONIC MEDIA DAN
LUBRICANT Mobil
LIFESTYLE THE HARVEST
RADIO

SUPPORTED BY SRI LANKA ASSOCHAM

ENDORSED BY Ministry of Industry and Commerce | Consulate General of India Jaffna | NCE

PARTNER COUNTRY India

(2542)



# Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

## A/L தொழில்நுட்பப் பிரிவு

**எமது நிறுவனத்தின் கடந்த கால சாதனைகள்**

- **A/L 2017** இல் தேசிய அளவில் 60இற்கும் மேற்பட்ட மாணவர்களை தொழில்நுட்ப பீடத்துக்கு அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
- **A/L 2018** மாணவர்களுக்கான மாதாந்த பரீட்சை, மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.
- **A/L 2019** முதல்நிலைப் பாடசாலைகளில் அதியுயர் புள்ளியை பெற்ற மாணவர்களை உருவாக்கியமை.
- **A/L 2020** மாணவர்களுக்கான முதலாவது பரீட்சைகளை முடித்த பெருமையுடன்.

பொறியியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்ப செய்முறை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் மூன்று மணித்தியாலங்கள் நடைபெறுகின்றது.

(சி-1382)

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்களால் மத்திரமே கற்பிக்கப்படுகின்றது**

மாணவர்களுக்கு தனிப்பாட அனுமதி உண்டு

**A/L 2020, Day Class புதிய பிரிவு**
**27.01.2018 காலை 8.00 மணிக்கு**

**தொடர்பு: 077 017 5346**



YAMALUBE® யமஹா வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!!! YAMAHA Revs Your Heart

## யமஹா வழங்கும் இலவச திருத்தல் மற்றும் பரிசோதனை முகாம்

### எதிர்வரும் சர்வதேச வியாபார சந்தையை முன்னிட்டு...



எமது நிறுவனத்தின் கைதேர்ந்த வாகன பரிசோதகர்களால் உங்கள் வாகனங்கள் இலவசமாக திருத்தி பரிசோதிக்கப்படுகின்றன. (27ஆம் திகதி (நாளை) மட்டுமே, இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்).

**யமஹா அசல் உதிரிப்பாகங்களையும் உடன் பெற்றுக் கொள்ளலாம்.**



யமஹா வழங்கும்...

### மாபெரும் வாகன சந்தை - 2018

பழையதை கொடுத்து புதியதை எடுத்துச் செல்லுங்கள் உங்களிடம் உள்ள அனைத்துவிதமான (Yamaha, Honda, Hero, TVS, Bajaj) பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய "யமஹா" மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு உரிமையாளராகுங்கள்.

YAMAHA RAY-ZR



இடம் - வீரசிங்கம் மண்டபம் அருகாமை

**இன்றும் நாளையும் மட்டுமே!!**

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மாபெரும் விலைக்கழிவு ரூபா 5000/- முதல் 50000/- வரை

அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

தொடர்புகட்கு :-
0776623824 / 021 222 4040
டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

077 662 3824
077 554 5843

**இடம்: வீரசிங்கம் மண்டபம் அருகாமை.**
**காலம்: 27ஆம் திகதி (நாளை) மட்டும்**

(சி-1381)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org